Chola
Enter a better life

ஒப்புதல் அறிவிப்பு

அனுப்புதல்:
கடன் பெறுபவர் பெயர்:

கடன் பெறுபவர் முகவரி:

இணை-கடன் பெறுபவர் 1 பெயர்:
இணை-கடன் பெறுபவர் 1 முகவரி:

இணை-கடன் பெறுபவர் 2 பெயர்:
இணை-கடன் பெறுபவர் 2 முகவரி:

இணை-கடன் பெறுபவர் 3 பெயர்:
இணை-கடன் பெறுபவர் 3 முகவரி:

இணை-கடன் பெறுபவர் 4 பெயர்:
இணை-கடன் பெறுபவர் 4 முகவரி:

இணை-கடன் பெறுபவர் 5 பெயர்:
இணை-கடன் பெறுபவர் 5 முகவரி:

பிணையாளர் பெயர்:

பிணையாளர் முகவரி:

பெறுதல்:

சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்,
'சோழா கிரெஸ்ட்', C 54 & 55, சூப்பர் B-4,
திரு. வி.க. இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
கிண்டி,
சென்னை-600032.

சிஜஎன்: L65993TN1978PLC007576.

ஐயா,

பார்வை: விண்ணப்ப எண்:

1. நான்/ நாங்கள் கடன் பெறுவதற்காக சமர்ப்பித்த/ சமர்ப்பிக்கவுள்ள விவரங்கள், தகவல்கள் மற்றும் ஆவணங்கள் அனைத்தும் எனது/எங்களது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டியவரை அசலானவை மற்றும் சரியானவை/ அசலாகவும், சரியாகவும் இருக்கும் என்பதுடன், அதில் ஏதாவது மாற்றங்கள் இருப்பின் உங்களுக்கு உடனடியாகத் தெரிவிக்க நான்/ நாங்கள் உறுதியளிக்கிறோம். இங்கு வழங்கப்பட்ட மற்றும் மின்னணு முறையில் பதிவேற்றம் செய்யப்பட்ட விவரங்கள் மற்றும் ஆவணங்கள் சிஜஎ்ப்சிஎல் பணியாளர்கள் அல்லது அதன் முகவர்களின் உதவியுடன் செய்யப்பட்டவை என்பதை நான் அறிந்துள்ளேன்.

2. என்னால்/எங்களால் தரப்படும் ஏதாவது விவரங்கள் மற்றும் தகவல்கள் தவறானவை அல்லது பொய்யானவை அல்லது தவறாக வழி நடத்துபவை அல்லது தவறான தகவல்களைத் தருபவையாக இருப்பது கண்டறியப்பட்டால் நான்/நாங்கள் அதற்குப் பொறுப்பாக்கப்படலாம் என்பது எனக்கு/எங்களுக்குத் தெரியும். நான்/ நாங்கள், சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் சிஜஎ்ப்சிஎல் & அதன் கூட்டாளிகள் அல்லது வேறு ஏதாவது நபர், அனைத்து விவரங்கள், தகவல்கள் மற்றும் ஆவணங்களை வைத்திருக்க/பகிர, கடன் மதிப்பீடுகள் அல்லது வேறு ஏதாவது நோக்கத்துக்காக எந்தவொரு தகவலையும் சரிபார்க்க அல்லது பகிர்வதற்கு அதிகாரமளிக்கிறோம்.

3. எனது/எங்களது தனிப்பட்ட தகவல்களைச் சரிபார்க்க, தரப் பரிசோதனைகளை மேற்கொள்ள, சட்டபூர்வ/ஒழுங்குமுறை தேவைகளுடன் இணங்குவதற்கு மற்றும் கடன் வழங்கல் தொடர்பான வேறு ஏதாவது செயல்பாடுகளுக்காக எனக்கும்/எங்களுக்கும் சிஜஎ்ப்சிஎல் பணியாளருக்கும் இடையிலான தொலைபேசி உரையாடல்/குரல் அழைப்பை பதிவு செய்து வைத்துக் கொள்ள நான்/நாங்கள் சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் சிஜஎ்ப்சிஎல் மற்றும் அதன் தொலைபேசி அழைப்புச் சேவை வழங்குனர்களுக்கு அதிகாரமளிக்கிறோம். அத்தகைய பதிவு, பெயர், முகவரி, பிறந்த தேதி, வருமான வரிக் கணக்கு எண், பணி, வருமான மற்றும் கடன் தகவல்கள் போன்ற எனது/எங்களது தனிப்பட்ட தகவல்கள்/தரவுகளைக் கொண்டிருக்கலாம் என்பதை நான்/ நாங்கள் புரிந்துள்ளோம்.

4. எந்தவொரு சட்டம், விதி, ஒழுங்குமுறைகளுக்குப் புறம்பாகவோ, எந்தவொரு அரசாங்க அல்லது சட்டபூர்வ அமைப்பாலும் அவ்வப்போது வெளியிடப்படும் ஏதேனும் சட்டம், சட்ட அமைப்பு அல்லது அறிவிப்புகள்/வழிகாட்டல்களுக்குப் புறம்பாக நான்/நாங்கள் இந்த விண்ணப்பம் செய்யவில்லை என்று நான்/ நாங்கள் உறுதியளிக்கிறேன்/உறுதியளிக்கிறோம். எனது/எங்களது கடன் விண்ணப்பத்தை அனுமதிப்பது/ நிராகரிப்பது சிஜஎ்ப்சிஎல்-இன் தனிப்பட்ட மற்றும் முழுமையான விருப்பத்திபடி அமைந்தது என்பதை நான்/நாங்கள் நன்றாக அறிந்திருக்கிறேன்/அறிந்திருக்கிறோம். தொகையானது மேலே குறிப்பிட்ட நோக்கத்துக்காக மட்டுமே பயன்படுத்தப்படும் என்றும், வேறு எந்தவொரு சட்டத்துக்குப் புறம்பான, ஊக அல்லது சமூக விரோத நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்படாது என்று நான்/நாங்கள் முன்வைக்கிறோம். திவால் நடைமுறைகள் அல்லது நிலுவைத் தவணைகளை மீட்பதற்கான வழக்குகள் எதுவும் தொடங்கப்படவோ/எனக்கு எதிராக நிலுவையிலோ இல்லை என்று நான்/நாங்கள் உறுதியளிக்கிறோம்.

5. எனது குடும்பத்தின் வருட வருமான மூன்று (3) லட்சம் ரூபாய்க்கும் அதிகம் அதாவது எனது மொத்தக் குடும்பம் (கணவன், மனைவி மற்றும் திருமணம் ஆகாத குழந்தைகள்) எனவே, நான்/ நாங்கள் தற்போது பெறும் கடன் மைக்ரோ ஃபைனான்ஸ் கடன் என்று கருதப்படத் தேவையில்லை என்பதை நான்/நாங்கள் உறுதியளிக்கிறோம்.

6. நான் பெறக்கூடிய கடனுக்கு அவ்வப்போது விதிக்கப்படும் கட்டணங்களை நான்/நாங்கள் படித்து, புரிந்து கொண்டுள்ளோம். நிர்வாக & செயலாக்கக் கட்டணம் மற்றும் விதிக்கப்படும் வரிகள் திரும்பப்பெற இயலாதவை என்பதையும், ரொக்கமாக எந்தவொரு பரிவர்த்தனையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும் நான்/நாங்கள் அறிந்துள்ளேன்/அறிந்துள்ளோம். 2013 நிறுவனங்கள் சட்ட விதிகளில்

கூறப்பட்டவாறு நான்/ நாங்கள், சிஜஎ ்ப்சிஎல் இயக்குனர்களுடன் நேரடியாகவோ, மறைமுகமாகவோ தொடர்பு கொண்டிருக்கவில்லை என்பதுடன், இந்திய ரிசர்வ் வங்கியின் கேஒய்சி வழிகாட்டுதல்களின்படி அரசியல் செல்வாக்கு உடைய நபர் இல்லை. நான்/ நாங்கள், அவ்வப்போது நடைமுறையில் உள்ள சிஜஎ ்ப்சிஎல்-இன் அனைத்து விதிகளையும் கடைபிடிப்பதுடன், மேற்காண் நிலையில் ஏதாவது மாற்றங்கள் இருப்பின் நிறுவனத்துக்குத் தெரிவிப்போம். சிஜஎ ்ப்சிஎல்-இன் முடிவைப் பாதிக்கக்கூடிய எந்தத் தகவலையும் நான்/நாங்கள் மறைக்கவில்லை/மறைக்கமாட்டோம்.

7. சிகேஒய்சிஆர் தரவு தளத்திலிருந்து எனது/எங்களது அடையாளம் மற்றும் முகவரியைச் சரிபார்க்கும் நோக்கத்துக்காக மட்டும் மத்திய கேஒய்சி பதிவகத்திலிருந்து (சிகேஒய்சிஆர்) எனது/எங்களது கேஒய்சி பதிவேடுகளைப் பதிவிறக்கம் செய்வதற்கு நான்/நாங்கள் எனது/எங்களது ஒப்புதலை வழங்குகிறேன்/வழங்குகிறோம். எனது/எங்களது கேஒய்சி பதிவேடுகள் எனது/எங்களது பெயர், முகவரி, பிறந்த தேதி, வருமான வரிக்கணக்கு எண், மற்றும் பிற போன்ற எனது/எங்களது தனிப்பட்ட தகவல்களை உள்ளடக்குக்கிறது என்பதை நான்/நாங்கள் புரிந்துள்ளோம். மேலும், உங்களுக்கு வழங்கப்பட்ட எண்/மின்னஞ்சல் முகவரியில் குறுந்தகவல்/மின்னஞ்சல் மூலம் சிகேஒய்சிஆர்-இலிருந்து தகவல்களைப் பெற நான்/நாங்கள் இதன் மூலம் சம்மதிக்கிறோம்.

8. உங்களிடம் நான்/நாங்கள் ஏற்கனவே சமர்ப்பித்த கேஒய்சி சான்றுக்கு ஏதாவது மேற்சேர்க்கை செய்யப்படும் நிகழ்வில், மேற்சேர்க்கை செய்யப்பட்ட கேஒய்சி சான்றின் சுய-சான்றளிக்கப்பட்ட நகல் ஒன்றை, அத்தகைய மேற்சேர்க்கை செய்யப்பட்ட 30 நாட்களுக்குள் சமர்ப்பிக்க நான்/ நாங்கள் உறுதியளிக்கிறோம். அதைப்போலவே, விண்ணப்பதாரர்/இணை விண்ணப்பதாரரின் இறுதி உரிமை விவரங்களில் ஏதேனும் மாற்றம் இருப்பின், அது, இறுதி உரிமைதாரர்(களின்) கேஒய்சி சான்றுடன் சேர்த்து உடனடியாக மேற்சேர்க்கை செய்யப்படும்.

9. யுஐடிஏஐ (ஆதார்) ஆல் வழங்கப்பட்ட ஆதார் அட்டை/ நேரடி இ-ஆதார்/மறைக்கப்பட்ட ஆதார் அட்டையை எனது/ நமது அடையாளம் மற்றும் முகவரிக்கான சான்றாக, சிஜஎ ்ப்சிஎல்-க்கு தானாக முன்வந்து சமர்ப்பிக்கிறேன்/சமர்ப்பிக்கிறோம். சிஜஎ ்ப்சிஎல் - வழங்கும் தெரிவுகளின்படி, அடையாளம் மற்றும் முகவரிச் சான்றாக, ஆதார் மட்டுமல்லாது பிற எந்தவொரு ஆவணமும் வைக்கப்படலாம் என்பதை நான்/நாங்கள் அறிந்துள்ளதுடன், தகவல் தெரிவிக்கப்பட்டது. நான்/நாங்கள் விண்ணப்பித்துள்ள வசதியை வழங்குவதற்காக ஆதார் சரிபார்ப்பதற்கு சிஜஎ ்ப்சிஎல்-க்கு எனது/எங்களது வெளிப்படையான சம்மதத்தை நான்/நாங்கள் வழங்குகிறோம். ஒருவேளை முகவரி/அடையாளச் சான்றாக நான்/நாங்கள் ஆதார் எக்ஸ்எம்எல் கோப்பு ஒன்றைச் சமர்ப்பித்தால், சிஜஎ ்ப்சிஎல் அதை மறைகுறியாக்கம் செய்து, பதிவு நோக்கத்துக்காக அதைச் சேமித்து வைப்பதுடன், மறைகுறியாக்கம் செய்வதற்காக அவர்கள் மூன்றாம் தரப்பு ஒன்றின் சேவையைப் பயன்படுத்தக்கூடும். சிஜஎ ்ப்சிஎல் அவர்களின் உரிய ஆய்வுகளின்போது அவசியமாகக் கருதப்படும் கடன் மற்றும் களச் சரிபார்ப்புகளுக்காக சிஜஎ ்ப்சிஎல் ஆதாரில் உள்ள அடையாளம் மற்றும் முகவரி ஆகியவை பகிரப்படலாம் என்று சிஜஎ ்ப்சிஎல் எனக்கு/எங்களுக்கு விளக்கியுள்ளது.

10. ஆதார் அல்லது வேறு மின்னணு-கேஒய்சி சேவை மூலம் மின்னணு கையொப்பத்தை அங்கீகரித்தல் உள்பட, தகவல் தொழில்நுட்பச் சட்டம் 2000இல் குறிப்பிடப்பட்டுள்ள செயல்முறைகள் மற்றும் அங்கீகார நுட்பங்களைப் பின்பற்றுவதன் மூலம் கடன் தொடர்பான ஆவணங்களில் நான்/நாங்கள், மின்னணு முறையில் கையொப்பமிட நாங்கள் ஒப்புதல் அளிக்கிறோம்,.

11. அரசுகளுக்கிடையிலான அமைப்பான நிதி நடவடிக்கை பணிக் குழுவால், பண மோசடி தடுப்பு மற்றும்/அல்லது தீவிரவாதத்துக்கான நிதியுதவியை எதிர்ப்பதில் உள்ள குறைபாடுகளுக்கான பொது அறிக்கையில் அடையாளப்படுத்தப்பட்டு, பட்டியலிடப்பட்டுள்ள அதிகார வரம்பைச் சேர்ந்த நபர்களுடன் எவ்விதமான வணிக/தொழில் பரிவர்த்தனைகள்/தொடர்புகள் எதுவும் எனக்கு/எங்களுக்கு இல்லை என்று நான்/நாங்கள் உறுதியளிக்கிறோம்.

12. எனது/எங்களது கடன் தகுதியை சோதிப்பதற்காக எந்தவொரு கடன் தகவல் நிறுவனத்திடமிருந்தும் கடன் அறிக்கை பெறுவதற்கு சிஜஎ ்ப்சிஎல் -க்கு இதன் மூலம் நான்/நாங்கள் அதிகாரமளிக்கிறோம். எனது/எங்களது அடையாளம், திருப்பிச் செலுத்தும் திறன் ஆகியவற்றைச் சரிபார்ப்பதற்கு

மற்றும்/அல்லது தவணைத் தேதியில் கட்டணம் செலுத்தத் தவறுதல் உள்ளிட்ட, இந்த விண்ணப்பத்தின் விதிமுறைகளை மீறும்பட்சத்தில் வசூலிப்பதற்கான முயற்சிக்காகவும் என்னால்/எங்களால் தரப்பட்டுள்ள மேற்கோள் தொடர்புகளைத் தொடர்பு கொள்ள நான்/நாங்கள் ஒப்புதலளிக்கிறோம். அவ்வப்போது கடன் தகுதித்தன்மையைத் தீர்மானிப்பதற்காக, சிஐஎஃப்சிஎல் தனது தனிப்பட்ட விருப்பத்தின் பேரில் தானாவோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட நபர்கள், வழக்குரைஞர், முகமைகள், அமைப்பு மற்றும் பிற மூலம், தரப்பட்ட ஏதாவது தகவல்களைச் சரிபார்க்கலாம் மற்றும் கடன் முன்னுரிமைகள், வேலை விவரங்களைச் சோதித்து, கடன் அறிக்கைகளைப் பெறும் என்பதற்கு நான்/நாங்கள் ஒப்புக்கொண்டு ஏற்பளிக்கிறோம். எனது/எங்களது தொழில் தகுதியைச் சரிபார்ப்பதற்காக, அதிகாரப்பூர்வ தொழில் பதிவு அமைப்புகளிலிருந்து எனது/எங்களது தொழில் விவரங்களை சிஐஎஃப்சிஎல் பெறுவதற்கு நான்/நாங்கள் இதன் மூலம் அதிகாரமளிக்கிறோம். தனி நபரின் கடன் மற்றும் அபாய விவரக்குறிப்புகளின் அடிப்படையில், வெவ்வேறு பிரிவைச் சேர்ந்த கடன் பெறுபவர்களுக்கு வட்டி விகிதங்கள் வெவ்வேறாக இருக்கும் என்பதையும், வட்டி விகிதத்தின் மாதிரி சிஐஎஃப்சிஎல் இன் இணைய தளத்தில் காட்டப்பட்டுள்ளது என்பதையும் நான்/நாங்கள் அறிந்துள்ளோம்.

13. பின்வருவன தொடர்பான தகவல்தொடர்புக்காக நீங்கள் எனக்கு குறுந்தகவல்/மின்னஞ்சல்/அறிவிப்புகள் அனுப்புவதற்கு மற்றும் என்னை அழைப்பதற்கு நான்/நாங்கள் இதன் மூலம் உங்களுக்கு அனுமதியளிக்கிறோம்:

   - எனது கடன் கணக்கு/கள் (கட்டாயமானது) தொடர்பான ஏதாவது பரிவர்த்தனை தகவல்கள்;

   அத்தகைய பரிவர்த்தனை சாராத தகவல்களைத் தேர்வு செய்வதற்கு பெட்டிகளில் டிக் குறியிடவும்;

   - ☑ கடன்கள்/சேவைகள் அல்லது அதுபோன்ற தொடர்புடைய சேவைகள் தொடர்பான ஏதாவது வணிக ரீதியான, சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரத் தகவல்கள்;
   - ☑ பிறந்த நாள்/திருமண நாள் வாழ்த்துகள் உள்ளிட்ட பண்டிகைக்கால வாழ்த்துகள்.

   குறிப்பு: சிஐஎஃப்சிஎல்-ஐ அணுகுவதன் மூலம் பரிவர்த்தனை சாராத தகவல் தொடர்புக்கு அளிக்கப்பட்ட ஒப்புதலை விண்ணப்பதாரர் மாற்ற/ரத்து செய்ய இயலும்.

14. ஆயுள், மருத்துவம், விபத்து மற்றும் பிறவற்றுக்கான காப்பீட்டைச் செயல்படுத்த ஏற்பாடு செய்யுமாறும், ஒருவேளை அனுமதிக்கப்பட்டால் சிஐஎஃப்சிஎல் மூலம் நிதியுதவிக்கு ஏற்பாடு செய்யுமாறும் நான்/நாங்கள் சிஐஎஃப்சிஎல் ஐ வேண்டுகிறோம்.

நன்றி,

தங்கள் உண்மையுள்ள,

இவர்களுக்காக

| கடன் பெறுபவர்யின் பெயர் & கையொப்பம்: | இணை-கடன் பெறுபவர் 1 பெயர் & கையெழுத்து | இணை-கடன் பெறுபவர் 2 பெயர் & கையொப்பம்: | இணை-கடன் பெறுபவர் 3 பெயர் & கையொப்பம்: |
|---|---|---|---|

இணை-கடன் பெறுபவர் 4 பெயர் & கையொப்பம்:

இணை-கடன் பெறுபவர் 5 பெயர் & கையொப்பம்:

பிணையாளர் பெயர் & கையொப்பம்:

கடன் ஒப்பந்தம் – சிறு நிறுவனக் கடன்

கடன் ஒப்பந்தத்தின் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தேதியில் பின்வருபவர்களால், பின்வருபவர்களுக்கு இடையில் இந்தக் கடன் ஒப்பந்தம் ('செயலாக்கத் தேதி) மேற்கொள்ளப்பட்டது:

இங்குள்ள அட்டவணையில் மேலும் குறிப்பாக விளக்கப்பட்டு அமைக்கப்பட்டுள்ள கடன் பெறுபவர் மற்றும் இணை-கடன் பெறுபவர்/கள் (இனிமேல் "கடன் பெறுபவர்" எனக் குறிக்கப்படுவார்கள்) மற்றும் இங்குள்ள அட்டவணையில் மேலும் குறிப்பாக விளக்கப்பட்டு அமைக்கப்பட்டுள்ள பிணையாளர்/கள் என்ற (இனிமேல் "பிணையாளர்" எனக் குறிக்கப்படுவார்கள்) சொற்பதங்கள் அதன் சூழல் அல்லது அதன் பொருளுக்கு மாறாக அமையாதவரை, அவரது/அதன்/அவர்களது வாரிசுகள், நிறைவேற்றுபவர்கள், நிர்வாகிகள், நியமனதாரர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் சட்டபூர்வ பிரதிநிதிகள் (இதில் கடன் பெறுபவர்/பிணையாளர் ஒரு தனி நபர்/தனி உரிமையாளர்), நிகழ்வைப் பொறுத்து அதில் ஈடுபாடுடைய வாரிசுதாரர்கள், (இதில் கடன் பெறுபவர்/பிணையாளர் 2013 நிறுவனங்கள் சட்டத்தின் பொருளுக்கு உட்பட்ட ஒரு நிறுவனம் அல்லது வேறு ஏதாவது கார்ப்பரேட் அமைப்பு), நிறுவனத்தின் அவ்வப்போதைய பங்குதாரர்கள், அவர்களது எஞ்சியிருப்பவர்கள் மற்றும் வாரிசுதாரர்கள், நிறைவேற்றுபவர்கள், நிர்வாகிகள், சட்டபூர்வ பிரதி நிதிகள், நியமனதாரர்கள் மற்றும் பங்குதாரர்களின் வாரிசுதாரர்கள் (இதில் கடன் பெறுபவர்/பிணையாளர் ஒரு கூட்டு நிறுவனம்), ஆகியோர் ஒரு தரப்பாக இருப்பார்கள்

மற்றும்

சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட், நிறுவனங்கள் சட்டம் 1956ன் கீழ் இணைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனம், அதன் பதிவு அலுவலகம் 'சோழா கிரெஸ்ட்', C 54 & 55, சூப்பர் B-4, திரு. வி.க. இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கிண்டி, சென்னை-600032 என்ற முகவரியில் அமைந்துள்ளது (இனிமேல் அது "நிறுவனம்" என்று குறிப்பிடப்படும்), என்ற சொற்பதம் சூழலுக்கு அல்லது அர்த்தத்துக்குப் பொருந்தாததாக இல்லாதவரையில் அதன் வாரிசுகளைக் குறித்து உள்ளடக்குவதுடன் இரண்டாம் தரப்பைக் குறிக்கும்.

இனிமேல், கடன் பெறுபவர்(கள்), பிணையாளி(கள்) மற்றும் நிறுவனம் ஆகியோர் ஒட்டுமொத்தமாக "பார்ட்டிகள்" என்றும், தனிப்பட்ட முறையில் "பார்ட்டி" என்றும் குறிக்கப்படும்.

அதேசமயம்:

A. இந்த நிறுவனம் பிறவற்றுடன், பல்வேறு வாடிக்கையாளர்களுக்கு கடன்கள்/கடன் வசதிகளை வழங்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளது;

B. கடன் பெறுபவர், கடன் விண்ணப்பத்தில் மற்றும் கீழுள்ள அட்டவணையில் முழுமையாக விளக்கப்பட்டுள்ள நோக்கத்துக்காக நிதி வசதி வேண்டி நிறுவனத்திடம் கோரியுள்ளார்.

C. அந்த நிதி வசதியைக் கடன் பெறுபவர்க்கு வழங்குமாறு நிறுவனத்திடம் பிணையாளி கோரியுள்ளதுடன், அதைப் பரிசீலனை செய்வதற்காக, இங்குள்ள ஒப்பந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை கடன் பெறுபவர் சரியான முறையில் செயல்படுத்துவதற்கும், இந்தக் கடன் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள

அனைத்துப் பொறுப்புகளையும் நிறைவேற்றவதற்கும், நிறுவனத்துக்கு உத்தரவாதமளிக்க ஒப்புக் கொண்டுள்ளார்;

D. கடன் பெறுபவர் மற்றும் பிணையாளர் ஆகியோர் கூறியவற்றை நம்பி, நிறுவனமானது, கீழே குறிப்பிட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் கடன் பெறுபவர் கோரிய கடனை வழங்க ஒப்புக் கொண்டுள்ளது.

இனி இந்தக் கடன் ஒப்பந்தம் பின்வருமாறு அமைந்திருக்கும்:

1. வரையறைகள் மற்றும் விளக்கங்கள்.

கீழுள்ள சொற்பதங்கள் பின்வரும் அர்த்தங்களைக் கொண்டிருக்கும். இங்கு வரையறுக்கப்படாமல் உள்ள வார்த்தைகளும், சொற்பதங்களும், 1897 பொது உட்பிரிவுகள் சட்டத்தில் அவற்றுக்கு விளக்கமும், பொருளும் ஒதுக்கப்பட்டிருந்தால், அந்த விளக்கத்தையும், பொருளையும் கொண்டிருக்கும்.

a. "பொருந்தும் சட்டம்" என்பது எந்தவொரு (a) சட்ட அதிகாரம் கொண்ட எந்தவொரு அரசாங்க அதிகார அமைப்பின் அரசியலமைப்பு, ஒப்பந்தங்கள், சட்டங்கள், விதிகள், குறியீடுகள், விதிமுறைகள், ஒழுங்குமுறைகள், அறிவிப்புகள், சுற்றறிக்கைகள், கட்டளைகள் அல்லது உத்தரவுகள், மற்றும் (b) உத்தரவுகள், முடிவுகள், தடை உத்தரவுகள், தீர்ப்புகள், விருதுகள், எந்தவொரு அரசாங்க அதிகார அமைப்பின் நடுவர் தீர்ப்புகள், ஆணைகள் அல்லது அமைப்புடனான ஒப்பந்தங்கள் என்று பொருள்படும்.

b. "தவணைத் தேதி" என்பது இந்தக் கடன் ஒப்பந்தத்தின் ஏதாவது உட்பிரிவின் கீழ் செலுத்தப்பட வேண்டிய கடனின் அசல், வட்டி மற்றும்/அல்லது இந்தக் கடன் ஒப்பந்தத்தின் கீழ் செலுத்த வேண்டிய வேறு ஏதாவது தொகை மற்றும்/அல்லது நிகழ்வைப் பொறுத்து கடன் தொகையின் மீதித் தொகை செலுத்தவேண்டிய தேதி என்று பொருள்படும்.

c. "எலக்ட்ரானிக் கிளியரிங் சர்வீசஸ்" அல்லது "ஈசிஎஸ்" மற்றும் "நேஷனல் ஆட்டோமேட்டட் கிளியரிங் ஹவுஸ்" அல்லது "என்ஏசிஎச்" என்பது இந்திய ரிசர்வ் வங்கியால் அறிவிக்கப்பட்ட ஈஎன்ஏசிஎச் அல்லது வேறு ஏதாவது ஆணைகள் என்று பொருள்படும், இந்தக் கடன் ஒப்பந்தத்தின் கீழ் தவணைகள் செலுத்துவதை எளிதாக்கப் பங்கேற்க கடனாளரால் எழுத்துபூர்வ ஒப்புதல் தரப்பட்டுள்ளது.

d. "தவணை" என்பது கடனைச் செலுத்தி முடிக்க ஒவ்வொரு தவணைத் தேதியன்றும் கடனாளர், கடன் காலத்தில் நிறுவனத்துக்கு வட்டியுடன் கடனை செலுத்த வேண்டிய தொகை என்று பொருள்படும்.

e. "கடன் ஒப்பந்தம்" என்பது இந்தக் கடன் ஒப்பந்தம் என்று பொருள்படுவதுடன், இதன் அட்டவணை/கள், ஏதாவது சேர்க்கை, வரவேற்புக் கடிதம், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அல்லது இந்தக் கடன் ஒப்பந்தத்தின் விதிமுறைகளின்படி அவ்வப்போது மாற்றம் செய்யப்படும் துணை ஒப்பந்தங்கள் அல்லது இணைப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கும்.

f. "கடன்" என்பது இந்தக் கடன் ஒப்பந்தத்தின் அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள சிறு நிறுவனக் கடன் தொகை என்று பொருள்படும்.

g. "கடன் விண்ணப்பம்" என்பது கடன் வேண்டி, கடனாளரால், கடன் வழங்குபவரிடம் நேரடியாகவோ, மின்னணு முறையிலோ சமர்ப்பிக்கப்படும் கடன் விண்ணப்பம் என்று பொருள்படும்.

h. "நிலுவையிலுள்ள தவணை" என்பது, எந்தவொரு சமயத்திலும், நிலுவையிலுள்ள கடன் தொகை, தவணைகளோடு சேர்த்து ஒன்றுசேர்ந்த செலுத்தப்படாத வட்டி மற்றும் கடன் தொடர்பாக கடனாளரால்

நிறுவனத்துக்குச் செலுத்த வேண்டிய தவணைகள் மற்றும் வேறு ஏதாவது கட்டணங்கள், அபராதக் கட்டணங்கள், செலவுகள், பொருந்தும் கட்டணங்கள் என்று பொருள்படும்.

i. **“அபராதக் கட்டணங்கள்” என்பது இந்தக் கடன் ஒப்பந்தத்தின் 16வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பொருளைக் கொண்டிருக்கும்.**

j. “முன்கூட்டியே முடித்தல்” என்பது முன்கூட்டியே கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக நிறுவனத்தால் முன்வைக்கப்பட்டு, அந்தச் சமயத்தில் அமுலில் உள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் படியான முன்கூட்டிய திருப்பிச் செலுத்தல் என்று பொருள்படும்.

k. “வட்டி விகிதம்” என்பது இந்தக் கடன் ஒப்பந்தத்தின் பிரிவு 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள வட்டி விகிதம் என்று பொருள்படும்.

l. ”திருப்பிச் செலுத்தல்” என்பது அபராதம் அல்லது வேறு கட்டணங்கள், உறுதியளிப்பு மற்றும்/அல்லது வேறு ஏதாவது கட்டணங்கள், பிரீமியம், இந்தக் கடன் ஒப்பந்தத்தின் விதிமுறைகளின்படி நிறுவனத்துக்குச் செலுத்த வேண்டிய பிற கட்டணங்கள் அல்லது தவணைகள், குறிப்பாக இந்தக் கடன் ஒப்பந்தத்தின் பிரிவு 7-க்காக வழங்கப்பட்டு திருப்பிச் செலுத்த வேண்டிய கடன் தொகை உள்பட, கடனுக்கான அசல் தொகை மற்றும் அதற்கான வட்டியையும் சேர்த்து தவணைகளாக திருப்பிச் செலுத்தல் என்று பொருள்படும்.

m. ”அனுமதிக் கடிதம்” என்பது நிறுவனம் கடனை அனுமதித்து, அது தொடர்பான விவரங்கள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைக் குறிப்பிட்டு, கடன் பெறுபவர்க்கு அனுப்பும் கடிதம் என்று பொருள்படும்.

n. “அட்டவணை” என்பது இந்தக் கடன் ஒப்பந்தத்துக்கான அட்டவணை என்று பொருள்படும்.

o. “வரவேற்புக் கடிதம்” என்பது இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றிய பிறகு, தவணைத் தேதிகள், ஒவ்வொரு தவணைத் தேதியிலும் செலுத்தவேண்டிய தவணைகள், தவணைகளுக்கு இடையிலான காலம் மற்றும் ஒவ்வொரு தவணையிலும் செலுத்தப்படும் அசல் மற்றும் வட்டியைப் பிரித்து விவரமாகக் குறிப்பிட்டு நிறுவனத்தால் கடன் பெறுபவர்க்கு அனுப்பப்படும் கடிதம் என்று பொருள்படும்.

2. கடனுக்கான விதிமுறைகள்:

a. கடன் விண்ணப்பத்திலும், அனுமதிக் கடித்தத்திலும் குறிப்பிட்டுள்ள நோக்கத்துக்காக, இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின்படி, கடன் பெறுபவர்க்கு கடன் வழங்க நிறுவனம் இதன்மூலம் ஒப்புக்கொள்கிறது.

b. இந்தக் கடன் ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள விதிமுறைகளின்படி நிலுவையிலுள்ள தொகைகளுடன் சேர்த்து கடனை முழுமையாகவும், இறுதியாகவும் கடனாளரால் செலுத்தப்பட்டு, இங்கு குறிப்பிடப்பட்டுள்ளவாறு இந்தக் கடன் ஒப்பந்தமானது முன்கூட்டியே ரத்து செய்யப்படாதவரையில், இந்தக் கடன் ஒப்பந்தத்தின்கீழ் வழங்கப்பட்டும் கடன் என்பது அட்டவணையில் (கடனின் காலம்) குறிப்படப்பட்டவாறு, வழங்கப்பட்ட தேதியிலிருந்து தொடங்கும் காலத்துக்கானது.

3. வட்டி:

a. கடன் தொகைக்கான வட்டி விகிதம் என்பது இங்குள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு இருக்கும் என்பதுடன், கடன் வழங்கப்பட்ட தேதியிலிருந்து அதனை (வட்டி) செலுத்த வேண்டிய பொறுப்பு கடன் பெறுபவர்க்கு உண்டு.

b. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வட்டியானது கடனின் காலத்தின்போது நிலையாக இருக்கும். இருப்பினும், இந்தக் கடன் ஒப்பந்தம் நடப்பில் இருக்கும் சமயத்தில், வருங்காலத்தில் இந்தக்

கடனுக்கான வட்டி விகிதத்தை அதன் விருப்பத்தின்படி அதிகபடுத்த அல்லது குறைப்பதற்கான உரிமை நிறுவனத்துக்கு உண்டு. அத்தகைய மாற்றம்(கள்) அனுமதிக் கடிதத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டதாக அமைவதுடன், 7 (ஏழு) நாட்கள் முன்கூட்டியே கடன் பெறுபவர்க்குத் தெரிவிக்கப்படுவதுடன், கடன் பெறுபவர் மற்றும் பிணையாளரைக் கட்டுப்படுத்துவதாக அமையும்.

c. வட்டியானது ஒவ்வொரு நாளுக்கும் சேரும் என்பதுடன், நிகழ்வுக்கு ஏற்ப, மாதாந்திர அடிப்படையில் அல்லது உண்மையில் கழிந்த நாட்களின் அடிப்படையில் கணக்கிடப்படும்.

d. இந்தக் கடன் ஒப்பந்தத்தின் கீழ் கடன் பெறுவது ஒரு வணிக ரீதியான பரிவர்த்தனையாகும் என்பதுடன், வட்டி வசூல் செய்தல் அல்லது பிற சட்டங்களின் கீழ் எந்தவொரு பாதுகாப்பையும் கடன் பெறுபவர்/பிணையாளர் விட்டுத் தருகிறார்.

e. வட்டி கணக்கிடுதல் – தவணைத் தொகையானது இங்குள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வட்டி விகிதத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட வட்டி மற்றும் அசலை உள்ளடக்குவதுடன், குறையும் மாதாந்திர இருப்பின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட அருகிலுள்ள ரூபாய்க்கு முழுமையாக்கப்படும்.

4. நிர்வாக & செயலாக்கக் கட்டணம்:

கடன் பெறுபவர் இந்த விண்ணப்பத்தை நிறுவனத்துக்கு சமர்ப்பிக்கும் சமயத்தில் இந்த ஒப்பந்தத்தின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டபடி ஒப்புக்கொண்டவாறு, கடனைச் செயலாக்கம் செய்வது மற்றும் அனுமதிப்பது தொடர்பான அனைத்துக் கட்டணங்களையும் எந்தவித வற்புறுத்தலும், தேவையற்ற செல்வாக்கும் இல்லாமல் செலுத்துவதற்கு கடன் பெறுபவர் தனது ஒப்புதலைத் தெரிவித்துள்ளார். கடனை அனுமதித்த பிறகு, கடன் பெறப்படவில்லை என்றாலும், கடனை நிறுவனம் வழங்கவில்லை என்றாலும் கடன் பெறுபவர் எந்தச் சூழ்நிலையிலும் நிர்வாக & செயலாக்கக் கட்டணத்தை கடன் பெறுபவர் திரும்பப் பெற இயலாது.

5. வழங்கல்:

a. கடன் பெறுபவர் நிறுவனம் தனக்குத் தரும் கடனை எந்த முறையில் பெற விரும்புகிறார் என்பதைத் தெரிவிக்க வேண்டும். இருப்பினும், கடன் வழங்கும் முறையைத் தனிப்பட்ட விருப்பத்தின் பேரில் தீர்மானிக்கும் உரிமை நிறுவனத்துக்கு உண்டு, இந்தக் கடன் ஒப்பந்தத்தின் கீழ் அதுவே கடன் பெறுபவருக்கு கடன் வழங்கப்பட்டதாகக் கருதப்படும். கடன் பெறுபவர் சார்பாக வேறு எந்தவொரு நபருக்கும் அவ்வாறு வழங்கப்படும் தொகையானது, கடன் பெறுபவருக்குத் தரப்பட்ட கடனாகவே கருதப்படும் என்பதோடு, கடன் பெறுபவர் இதன் மூலம் அதை ஏற்றுக் கொள்கிறார்.

b. இந்தக் கடன் ஒப்பந்த விதிமுறைகளின்படி கடன் பெறுபவருக்கு நிறுவனம் வழங்கும் தொகை அனைத்தும் என்இஎஃப்டி/ஆர்டிஜிஎஸ் அல்லது பணம் வழங்குவதற்குப் பொருந்தும் சட்டத்தின்கீழ் ஏற்றுக் கொள்ளப்பட்ட வேறு ஏதாவது முறைகளின்படி இருக்கும், இது நிறுவனத்தின் தனிப்பட்ட விருப்பத்தின்படி அமையும்.

c. (“வழங்கப்பட்ட தேதி”) என்பது என்இஎஃப்டி/ஆர்டிஜிஎஸ் அல்லது வேறு ஏதாவது மின்னணு பணப் பரிமாற்ற முறை வாயிலாக கடன் பெறுபவரின் வங்கிக் கணக்கு நிறுவனம் நேரடியாகப் பணம் வரவு வைத்த தேதியாக இருக்கும் என்பதைக் கடன் பெறுபவர் இதன் மூலம் ஒப்புக் கொள்கிறார்.

d. கடனை ரத்து செய்வதற்கு அல்லது வழங்கப்படும் தொகையை மறுக்கும் உரிமை கடன் பெறுபவருக்கு இல்லை.

6. காப்பீடு:

கடன் பெறுபவரின் வேண்டுகோளின் பேரில், விபத்து, தற்செயலாக மருத்துவமனையில் அனுமதிக்கப்படுதல், நிறுவனத்துக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை மற்றும்/அல்லது தீவிர உடல் நலக் குறைபாடு ஆகிய

அபாயங்களுக்கு எதிராக கடன் பெறுபவருக்கான காப்பீடு ஒன்றுக்கான பிரீமியம் தொகைக்கும் நிறுவனம் தனது தனிப்பட்ட விருப்பத்தின்கீழ் நிதியுதவி செய்யலாம், ஆனால் அத்தகைய காப்பீடானது கடன் பெறுபவர் சார்பாக நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட காப்பீட்டு நிறுவனத்தில் நிறுவனத்தால் எடுக்கப்பட்டு, ஏதாவது இழப்பீடு ஏற்படும்பட்சத்தில், காப்பீட்டு நிறுவனம் அந்த இழப்பீட்டை நிறுவனத்துக்கு வழங்க வேண்டும் என்ற குறிப்பான அறிவுறுத்தல் மற்றும் அதிகாரத்தை கடன் பெறுபவர் காப்பீட்டு நிறுவனத்துக்கு வழங்கியிருக்க வேண்டும். காப்பீடு மூலம் கிடைக்கும் தொகையை கோரிப்பெற்று, அதை இந்தக் கடன் ஒப்பந்தத்தின்கீழ் செலுத்த வேண்டிய தொகைக்காக வரவு வைப்பதற்கான திரும்பப்பெற இயலாத அதிகாரத்தைக் கடன் பெறுபவர் நிறுவனத்துக்கு வழங்குகிறார். கடன் பெறுபவர் சார்பாக நிறுவனத்தால் செலுத்தப்படும் காப்பீட்டு பிரிமியம் தொகையும் இங்கு அனுமதிக்கப்பட்ட அசல் தொகையாகச் சேர்க்கப்படும் என்பதோடு, அது இந்தக் கடனின் ஒரு பகுதியாக இருக்கும். கடனின் ஒரு பகுதியாக அமையும் காப்பீட்டு பிரிமியம் தொகையானது, நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு காப்பீட்டு நிறுவனத்துக்கு நேரடியாக வழங்கப்படும் என்பதுடன், அவ்வாறு வழங்கப்படும் தொகையும், கடன் பெறுபவருக்கு வழங்கப்பட்ட தொகையாகவே கருதப்படும்.

ஒருவேளை, கடன் பெறுபவர் ஒரு காப்பீட்டுத் திட்டத்தைத் தேர்வு செய்திருந்து, நிறுவனத்தால் எடுக்கப்பட்ட 'குழு காப்பீட்டு பாலிசி' ஒன்றின் உறுப்பினராக இருந்தால், அதன் கீழ் பெறப்படும் காப்பீட்டுத் தொகையை நிலுவையிலுள்ள தவணைகளுக்காக வரவில் வைத்துக்கொள்ளும் உரிமை நிறுவனத்துக்கு உண்டு. அவ்வாறு வரவு வைத்தபிறகு, மீதித் தொகை ஏதாவது எஞ்சியிருந்தால், அது கடன் பெறுவரிடம் வழங்கப்படும். ஏதாவது பற்றாக்குறை இருப்பின், அதை உடனடியாக முழுமையாகத் திருப்பிச் செலுத்த வேண்டிய பொறுப்பு கடன் பெறுபவருக்கு உண்டு.

7. திருப்பிச் செலுத்தல்:

a. அனைத்துத் தவணைகளையும், கட்டணங்களையும் செலுத்த வேண்டிய தவணைத் தேதிகளில், எவ்விதமான தாமதமும், தவறுதலும் இல்லாமல் கடன் பெறுபவர் நிறுவனத்துக்குச் செலுத்த வேண்டும். இந்தக் கடனை வழங்குவதற்கு, திருப்பிச் செலுத்தல் அட்டவணையுடன் கண்டிப்பாக இணங்குவது ஒரு முக்கிய நிபந்தனையாகும் என்பதையும், நேரம் தான் இந்த ஒப்பந்தத்தின் முக்கிய சாராம்சம் ஆகும் என்பதைக் கடன் பெறுபவர் ஒப்புக்கொண்டு ஏற்கிறார்.

b. கடன் பெறுபவர், அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விதிமுறைகளின்படி தவணைகளாக திருப்பிச் செலுத்த வேண்டும். இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள திருப்பிச் செலுத்தல் அட்டவணை நிறுவனத்தின் உரிமைக்கு எவ்விதப் பாரபட்சமும் இல்லாதது, இந்தக் கடன் ஒப்பந்தத்தின் கீழ் கூறப்பட்டவாறு வட்டி மற்றும் பிற கட்டணங்களோடு சேர்த்து முழுக்கடனையும், இந்தக் கடன் ஒப்பந்தத்தின்கீழ் கூறப்பட்டவாறு கேட்கும்போது செலுத்தப்பட வேண்டும், மேலும், தவணையைக் கணக்கிடுவது/முடிவு செய்வது ஆகியவை தவணைகளின் தொகையை மறு-கணக்கீடு செய்வதற்கான நிறுவனத்தின் உரிமைக்குப் பாரபட்சம் இல்லாமல் இருக்கும், தவணைகள் தவறாகக் கணக்கிடப்பட்டுள்ளதாக ஏதாவது ஒரு கட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டால் அதுவும் இதில் உள்ளடங்கும். இருப்பினும், அட்டவணையில் தரப்பட்டுள்ள தவணைகள், நிறுவனம் பொருத்தமானது என்று கருதினால் எந்த நேரத்திலும் கடன் ஒப்பந்தத்தை ரத்து செய்து, ஏற்கனவே செலுத்தப்பட வேண்டிய மற்றும் செலுத்தப்படாத மீதித் தொகை ஏதாவது இருப்பின் அவற்றையும், எதிர்காலத் தவணைத் தொகைகள் மீது அனுமதிக்கப்படும் ஏதாவது தள்ளுபடிக்கு உட்படுத்தப்பட்டு, எதிர்காலத்தில் செலுத்தப்பட வேண்டிய தவணைத் தொகைகள் அனைத்துடனும் சேர்த்து திரும்பச் செலுத்தக் கோரும் நிறுவனத்தின் உரிமைகளைப் பாதிக்காது.

c. கடன் பெறுபவர், நிறுவனத்துக்குச் செலுத்த வேண்டிய தொகை அனைத்தும், எவ்விதமான பிடித்தமும் இல்லாமல் தவணைத் தேதியன்று அல்லது அதற்கு முன் செலுத்தப்பட வேண்டும்.

d. அபராதத் தொகை விதிக்கப்படுவது, இந்தக் கடன் வழங்குவதற்கு இன்றியமையாத நிபந்தனையான, திருப்பிச் செலுத்தும் அட்டவணையைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும் என்ற கடன் பெறுபவரின் கடமையிலிருந்து அவர்களை விடுவிக்காது.

e. நிறுவனம் தவணைகளைக் கணக்கிடுவதையும், அதை அசல் மற்றும் தவணையாகப் பிரிக்கும் முறையையும் பரிசீலித்து, புரிந்துகொண்டு, ஒப்புக்கொண்டதாக கடன் பெறுபவர் உறுதிப்படுத்துகிறார்.

f. தவணையைச் செலுத்த வேண்டிய தேதி விடுமுறை நாளாக இருந்தால், அதற்கு அடுத்து உடனடியாக வரக்கூடிய வேலை நாளன்று கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

g. எந்தவொரு காரணத்துக்காகவும், தவணைத் தேதிகளுக்கு முன்னரே கடன் பெறுபவரால் முன்கூட்டியே செலுத்தப்படும் ஏதாவது கட்டணங்கள், கடன் பெறுபவரின் கடன் கணக்கில் வரவு வைக்கப்படும். அவ்வாறு பெறப்பட்ட முன்கூட்டிய கட்டணம் தவணைத் தேதியன்று தான் தவணைக்காக சரி செய்யப்படும். அவ்வாறு பெறப்பட்ட முன்கூட்டிய கட்டணங்கள், வட்டியில் ஏதாவது தள்ளுபடி பெறுவதற்குத் தகுதி பெறாது.

h. இந்தக் கடன் ஒப்பந்தத்தின் 15 பிரிவின் படி, முன்கூட்டியே முடித்தலின் மூலம் கடனைத் திருப்பிச் செலுத்துவதை கடன் பெறுபவர் தேர்வு செய்யலாம்.

i. கடன் பெறுபவர், இந்த ஒப்பந்தத்தின்படி, தவணைகளை அந்தந்தத் தேதிகளன்றோ, அதற்கு முன்னரோ, கட்டணங்கள் (ஏதும் இருப்பின்) செலுத்த வேண்டிய சமயத்திலும் செலுத்தத் தவறும் நிகழ்வில், தவணைத் தேதியின் இறுதியில், நிறுவனமானது அதை குறிப்பிட்ட சிறப்புக் கணக்கு (எஸ்எம்ஏ)/செயல்படாத கணக்கு (என்பிஏ) அல்லது இந்திய ரிசர்வ் வங்கியின் (ஆர்பிஐ) பொருந்தும் வழிகாட்டல்களின்படி அதுபோன்ற வேறு ஏதாவது பிரிவின் கீழ் வகைப்படுத்தும். எஸ்எம்ஏ மற்றும் என்பிஏ பிரிவுகளாக வகைப்படுத்துவதற்கான அடிப்படை மற்றும் அதற்கான உதாரணம் இந்த அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளது.

8. தவணைகளைச் செலுத்துவதற்கான முறை:

a. இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, கடனைத் திருப்பிச் செலுத்துவது, நிலையான அறிவுறுத்தல்கள், எலக்ட்ரானிக் கிளியரிங் சிஸ்டம் (இசிஎஸ்) அல்லது ஏசிஎச்/இ-என்ஏசிஎச் அல்லது கடன் பெறுபவரின் வங்கிக் கணக்கில் நேரடியாகப் பிடித்தம் செய்து தவணைகளை வசூல் செய்வதற்கு நிறுவனத்துக்கு அதிகாரமளித்து அவ்வப்போது நிறுவனத்தால் ஏற்கப்படும் அதுபோன்ற வேறு முறை வழியாக அமையும்.

b. தவணைகளைச் செலுத்துவதற்காக, கடன் பெறுபவர் நிறுவனத்துக்கு இசிஎஸ் அல்லது ஏசிஎச்/இ-என்ஏசிஎச் ஆணைகளை வழங்க வேண்டும். அத்தகைய ஆணைகளை சமர்ப்பிப்பது, நிறுவனம் அத்தகைய ஆணைகளை செயலாக்கவும், தத்தமது தேதிகளில் அவற்றைச் செயலாக்கவும் கடன் பெறுபவர் நிறுவனத்துக்கு அளித்த நிபந்தனையற்ற மற்றும் திரும்பப்பெற இயலாத அதிகாரமாகவும், இசிஎஸ்/ஏசிஎச்/இ-என்ஏசிஎச் ஆணைகள் செயலாக்கம் செய்யப்படும்போது அவை பணமாக்கப்படும் என்று கடன் பெறுபவர் உத்தரவாதம் தருகிறார் என்றும் கருதப்படும். ஏதாவது ஒரு காரணத்துக்காக ஏசிஎச்/இ-என்ஏசிஎச் அல்லது இசிஎஸ் ஆணைகளை செயலாக்கம் செய்யாமல் விடுவது, இந்தக் கடன் ஒப்பந்தத்தின் கீழ் கடன் பெறுபவர் செலுத்த வேண்டிவரும் தவணைகள் அல்லது வேறு ஏதாவது தொகைகளைச் செலுத்தத் தேவைப்படும் கடன் பெறுபவரின் பொறுப்பைப் பாதிக்காது.

c. பிரிவு 8(a)இன் படி கடன் பெறுபவர் வழங்கிய ஏதாவது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அல்லது எல்லா இசிஎஸ்/ஏசிஎச்/இ-என்ஏசிஎச் ஆணையும்

i. நிறுவனத்தின் வசம் இருக்கும் சமயத்தில் தொலைந்துவிட்டால், அழிந்துவிட்டால் அல்லது தவறிவிட்டால் ii. அதில் கையொப்பம் இடும் ஒருவர் அல்லது அதிகமானவர்களின் (ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் இருப்பின்) இறப்பு, திவால், புத்தி பேதலிப்பு, அதிகாரம் முடிந்து போவது அல்லது வேறுவிதமாக அல்லது பணம் எடுக்கும் வங்கி கலைக்கப்படுதல் அல்லது ஏதாவது தடைக்காலம் காரணமாகப் பணமாக மாற்ற இயலாமல் போனால், அத்தகைய நிகழ்வில், அவ்வாறு தொலைந்துபோதல், அழிவு அல்லது தவறிவிடுதல் போன்ற (நிகழ்வைப் பொறுத்து) மேற்கூறிய காரணங்களால் அந்தக் காசோலையோ, அவற்றில் ஒன்றையோ பணமாக்க முடியாது என்பது குறித்து நிறுவனத்திடமிருந்து தகவல் கிடைக்கப்பெற்றவுடன், அவ்வாறு தொலைந்துபோன,

அழிந்துவிட்ட அல்லது தவறிப்போன அல்லது பணமாக்க முடியாமல் போன காசோலைகளின் எண்ணிக்கைக்குப் போதிய காசோலைகளை நிறுவனத்துக்குத் தரவேண்டும் அல்லது கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு நிறுவனத்தால் ஏற்கப்பட்ட மற்றும் அனுமதிக்கப்பட்ட பொருத்தமான மாற்று ஏற்பாடு செய்து தரவேண்டும்.

d. எந்தவொரு காரணத்துக்காகவும் நிறுவனத்தால் ஏதாவது காசோலை/ஆணையை செயலாக்கம் செய்ய முடியாமல் போவது, இந்தக் கடன் ஒப்பந்தத்தின் கீழ் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன் பெறுபவரது பொறுப்பை எவ்விதத்திலும் பாதிக்காது என்று கடன் பெறுபவரால் புரிந்துகொள்ளப்பட்டு, ஏற்கப்படுகிறது. எந்தவொரு காரணத்துக்காகவும், பணமாக்கலில் தாமதம், விடுபட்டுப்போதல் அல்லது புறக்கணிப்பு, ஏதாவது காசோலை(கள்)/ஆணைகள் (ஏற்கனவே கொடுக்கப்பட்டவை அல்லது இங்குள்ள விதிமுறைகளின்படி கடன் பெறுபவர் நிறுவனத்துக்குத் தரவேண்டியவை) சேதமடைதல் அல்லது தொலைந்துபோதல் ஆகியவற்றுக்கு நிறுவனம் எவ்விதத்திலும் பொறுப்பாகாது.

e. தேவைப்பட்டால், கடன் பெறுபவர், நிறுவனத்தின் அனுமதிக்கு உட்பட்டு, வழங்கப்பட்ட காசோலைகள்/ஆணையை மாற்றலாம்/பரிமாற்றலாம் மற்றும் ஒரு வங்கியில் பெறப்பட்டதை மற்ற வங்கிக்கு மாற்றலாம், ஒவ்வொரு மாற்றத்துக்கும் இந்த அட்டவணையில் குறிப்பிட்டுள்ள மாற்றத் தொகையை நிறுவனத்துக்குச் செலுத்திவிட்டு.

f. இந்தக் கடன் ஒப்பந்தம் மற்றும்/அல்லது நடப்பிலுள்ள சட்டத்தின் கீழ் நிறுவனம் பெற்றுள்ள உரிமைகள் அல்லது தீர்வுகளுக்கு எவ்விதப் பாரபட்சமும் இல்லாமல், ஒவ்வொரு செயலாக்கம் காசாக்கப்படாமல் போகும் போதும், இந்த அட்டவணையில் குறிப்பிட்டுள்ள காசோலை/ஆணை காசாக்கப்படாமைக்கான கட்டணங்களைச் செலுத்த வேண்டிய பொறுப்பு கடன் பெறுபவருக்கு உண்டு, காசாக்கப்படாத சமயத்தில் கட்டணம் விதிப்பது என்பது / பணம் செலுத்தல் மற்றும் தீர்வு அமைப்புகள் சட்டம் 2007 அல்லது அவ்வப்போது திருத்தப்பட்டு, அமுலில் உள்ள பொருந்தும் வேறு ஏதாவது சட்டம் அல்லது தொடர்புடைய பிற சட்டங்களின் கீழ் நிறுவனம் பெற்றுள்ள உரிமைகளுக்குப் பாரபட்சம் இல்லாதது:

g. வெளியிடத்து காசோலைகள் மூலம் கட்டணம் செலுத்தப்படும்போது, இந்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, நிறுவனம் தனது விருப்பத்தின்படி அவ்வப்போது மாற்றியமைக்கும் காசோலை வசூல் கட்டணங்களைச் செலுத்தவேண்டிய பொறுப்பு கடன் பெறுபவருக்கு உண்டு,

h. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள் நிறுவனத்தின் தனிப்பட்ட விருப்பத்தின்படி மாற்றப்படுவதற்கு உட்பட்டவை.

i. கடன் அல்லது அதன் ஏதாவது ஒரு பகுதி செலுத்தப்பட வேண்டியும், நிலுவையிலும் இருக்கும் வரை இசிஎஸ் அல்லது ஏசிஎச்/இ-என்ஏசிஎச் ஆணைகளை ரத்து செய்ய அல்லது கட்டணத்தை நிறுத்துவதற்கான அறிவுறுத்தல்களை வழங்குவதற்கான உரிமை கடன் பெறுபவருக்கு இல்லை என்பதுடன், அதுபோன்ற ஏதாவது செயல்கள் ஏமாற்றும் நோக்கத்துடன் செய்யப்பட்டதாகவும், பேச்சுவார்த்தைக்குட்பட்ட கருவிகள் சட்டம் 1881/ பணம் செலுத்தல் மற்றும் தீர்வு அமைப்புகள் சட்டம் 2007 அல்லது அவ்வப்போது திருத்தப்பட்டு அமுலில் உள்ள வேறு ஏதாவது பொருந்தும் சட்டங்களின் வழக்கு தொடரப்படுவதைத் தவிர்க்கும் நோக்கத்திலும் செய்யப்பட்டதாகக் கருதப்படுவதுடன், கடன் பெறுபவருக்கு எதிராக பொருத்தமான குற்றவியல் நடைமுறைகளைத் தொடங்கும் உரிமை நிறுவனத்துக்கு உண்டு.

j. காசாகாமல் திரும்பும் இசிஎஸ் அல்லது ஏசிஎச்/இ-என்ஏசிஎச் ஆணைகள் அல்லது வேறு ஏதாவது மின்னணு கிளியரிங் ஆணையை (செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை அனைத்துக்காகவும் கடன் பெறுபவரால் நிறுவனத்துக்கு தரப்பட்டது) கடன் பெறுபவர் செலுத்த வேண்டிய நிலுவைகள் அனைத்தையும் பெறுவதற்காகவும், அனைத்து நிலுவையும் பெறப்படும் வரையிலும் பல சந்தர்ப்பங்களிலும், வெவ்வேறு தேதிகளிலும் கடன் பெறுபவரின் வங்கிக் கணக்கில் நிறுவனம், தனது தனிப்பட்ட விருப்பத்தின் பேரில் செயலாக்கம் செய்யலாம் என்பதை கடன் பெறுபவர் புரிந்துகொண்டு,

உறுதிப்படுத்தி, ஒப்புக் கொள்கிறார். நிறுவனம் அவ்வாறு செயலாக்கம் செய்வதை கடன் பெறுபவர் சர்ச்சையாக்க, புகார் செய்யாதிருக்க, ஆட்சேபம் செய்யாதிருக்க ஒப்புக் கொண்டு, உறுதியளிக்கிறார்.

9. தவணைகளை மாற்றுதல் மற்றும் திருத்தியமைத்தல்:

a. நிறுவனம் தனது தனிப்பட்ட விருப்பத்தின்பேரில், எவ்விதப் பொறுப்பும் இல்லாமல், அது பொருத்தமானது எனக் கருதும் அத்தகைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில், மேலும் சில காலத்துக்கு கடனை மீளாய்வு செய்யும் உரிமையைத் தன்வசம் கொண்டுள்ளது .

b. நிறுவனமானது தானாக அல்லது கடன் பெறுபவரின் எழுத்துபூர்வ கோரிக்கையின் பேரில், அது பொருத்துமானது எனக் கருதினால், அது தீர்மானிக்கும் முறையிலும், காலத்துக்கும், கடன் பெறுபவரின் முறையான ஒப்புதலுடன் தவணைகளை மாற்றியமைக்கலாம் அல்லது அட்டவணையைத் திருத்தலாம், அச்சமயத்தில் இந்த அட்டவணையில் கூறப்பட்ட எதையும் கருத்தில்கொள்ளாமல், மாற்றியமைத்தபடியும், திருத்தப்பட்ட அட்டவணைப்படியும் கடன் பெறுபவர் திருப்பிச் செலுத்த வேண்டும். கடன் பெறுபவர் திருத்தப்பட்ட அமைப்பின்படி இசிஎஸ் அல்லது ஏசிஎச்/இ-என்ஏசிஎச் ஆணைகளை வழங்குவது உள்பட மாற்றத்துக்கான தேவைகளுடன் இணங்க வேண்டும்.

c. கடன் பெறுபவர் திருப்தியான முறையில் கடன் திருப்பிச் செலுத்துவதன் அடிப்படையில், நிறுவனமானது தனது தனிப்பட்ட விருப்பத்தின்பேரில், இங்கு வழங்கப்பட்டுள்ள கடனுடன் கூடுதலாகவும், அதற்கு மேலும் கடன்களை அனுமதிக்கலாம். நிறுவனத்தில் அவ்வப்போது நடப்பிலுள்ள கடன் விதிமுறைகளின்படி நிறுவனத்தால் குறிப்பிடப்படும் அத்தகைய ஆவணங்களை வழங்கினால் மட்டுமே கூடுதல் கடன்கள் அனுமதிக்கப்படும். இந்த உட்பிரிவின் மூலம் கூடுதல் கடன்களைக் கோரும் உரிமை எதுவும் கடன் பெறுபவருக்கு இல்லை.

10. தவறும் நிகழ்வுகள்:

பின்வரும் நிகழ்வுகள் “தவறும் நிகழ்வு” ஒன்றை உருவாக்கும்: -

a. கடன் பெறுபவர் மற்றும்/அல்லது பிணையாளர் கடமைகளை நிறைவேற்றத் தவறுதல், கடன் அல்லது ஏதாவது தவணை, கட்டணம், தொகை அல்லது செலவுகளை திருப்பிச் செலுத்தத் தவறுதல் அல்லது நிறுவனம் கேட்டாலும், கேட்காவிட்டாலும் செலுத்த வேண்டிய நேரத்தில், இங்கு குறிப்பிட்டுள்ள முறைப்படி நிறுவனத்துக்குச் செலுத்த வேண்டிய வேறு ஏதாவது தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறுதல்,

b. கடன் தொடர்பான முக்கியமான ஏதாவது தகவல்களை கடன் பெறுபவர் மறைத்து விட்டார் என்று நிறுவனம் கருதினால்; அல்லது

c. திவால், தானாகவோ அல்லது வேறு விதமாக நிறுத்துதல், தொழிலில் தோல்வி, திவால் நடவடிக்கை மேற்கொள்ளுதல், கடன் பெறுபவர்/பிணையாளருக்குக் கடன் வழங்கியவரின் நன்மைக்கான பொதுவான ஒதுக்கீடு, அல்லது கடன் பெறுபவர்/பிணையாளர், கடன் வழங்கியவர் எவருக்காவது கட்டணம் செலுத்துவதை நிறுத்தி வைத்தால் அல்லது அவ்வாறு செய்யப் போவதாக அச்சுறுத்தினால், தனது சொத்துகளுக்கு திவால் செயல்முறை நிபுணர், பெறுபவர்/அறங்காவலர் அல்லது அதுபோன்ற அலுவலர் ஒருவரை நியமித்தல், கடன் பெறுபவரோ/பிணையாளரோ அல்லது அவர்களுக்கு எதிராகவோ திவால் மனுவை ஏற்பது, அல்லது கடன் பெறுபவர்/பிணையாளர் தொழிலை நிறுத்துவதற்கான ஏதாவது மனுவை ஏற்று, ஏற்கப்பட்ட 30 நாட்களுக்குள் திரும்பப் பெறாமல் இருப்பது; அல்லது

d. ஒருவேளை கடன் பெறுபவர்/பிணையாளர் (ஒரு நிறுவனமாக இருந்து) ஒன்றிணைத்தல் அல்லது மறுகட்டமைப்பு நோக்கத்துக்காக கலைப்புக்குச் செல்கிறார், நிறுவனத்தின் முன்கூட்டிய எழுத்துபூர்வ அனுமதி இருந்தாலன்றி; அல்லது

e. ஒருவேளை கடன் பெறுபவர்/பிணையாளர் தனது தொழிலை நிறுத்தினால் அல்லது நிறுத்துவதாக அச்சுறுத்தினால்; அல்லது

f. கடன் பெறுபவரின் கடன்கள் அவரது சொத்துகளைவிட அதிகம் அல்லது கடன் பெறுவர், நஷ்டம் தரும் ஒரு தொழிலை நடத்திக் கொண்டிருக்கிறார் என்று ஒரு கணக்காளர் அல்லது நிறுவனத்தால் நியமிக்கப்பட்ட கணக்காளர் நிறுவனம் (எந்த நேரத்திலும் அவ்வாறு செய்வதற்கான உரிமை நிறுவனத்துக்கு உண்டு மற்றும் இதன் மூலம் அதற்கு அதிகாமளிக்கப்படுகிறது) சான்றளித்தால்; அல்லது

g. வழங்கப்பட்ட ஏதாவது ஏசிஎச்/இ-என்ஏசிஎச் அல்லது இசிஎஸ் ஆணைகள் அல்லது இங்குள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி கடன் பெறுபவரால் நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட வேண்டியவை, செயலாக்கம் செய்யப்படும்போது எந்தவொரு காரணத்துக்காகவும், செயலாக்கம்/பணமாக மாற்றப்பட இயலவில்லை; அல்லது

h. எந்தவொரு காரணத்துக்காகவும், ஏதாவது ஆணைகளுக்கான கட்டணத்தை நிறுத்தி வைக்குமாறு கடன் பெறுபவர் ஏதாவது அறிவுறுத்தலை வழங்கியிருந்தால் அல்லது கடன் பெறுபவர் நிறுவனத்துக்கு வழங்கிய ஏதாவது ஆணை நிராகரிக்கப்பட்டால்; அல்லது

i. இங்குள்ள ஏதாவது விதிமுறைகள், உடன்படிக்கைகள் மற்றும் நிபந்தனைகளை கடன் பெறுபவர்/பிணையாளர் மீறினால் அல்லது இந்தக் கடன் ஒப்பந்தத்தில் அல்லது சமர்ப்பிக்கப்பட்ட வேறு ஏதாவது ஆவணத்தில் தரப்பட்ட அல்லது கூறப்பட்ட தகவல்கள் பொய்யானது, துல்லியமற்றது அல்லது தவறாக வழி நடத்துபவை எனக் கண்டறியப்பட்டால்; அல்லது

j. கடன் பெறுபவரின் மரணம்/புத்தி பேதலிப்பு அல்லது சட்டபூர்வ இயலாமையின் போது அல்லது

k. கடன் பெறுபவரின் அமைப்பு அல்லது நிர்வாகத்தில் குறிப்பிடத்தக்க மாற்றம் நிகழும்போது அல்லது நிறுவனத்தின் முன்கூட்டிய எழுத்துபூர்வ ஒப்புதல் இல்லாமல் கடன் பெறுபவரின் மறுகட்டமைப்பு அல்லது கடன் பெறுபவரின் நிர்வாகம் நிறுவனத்தின் நம்பிக்கையை இழக்கும்பட்சத்தில்; அல்லது

l. வேறு ஏதாவது நபருடனான கடன்/வசதி/ஒப்பந்தத்தை கடன் பெறுபவர்/பிணையாளர் மீறினால்; அல்லது

m. கடன் பெறுபவர்/பிணையாளர், ஒரு கடன் பெறுபவராகவோ/பிணையாளராகவோ இருந்து நிறுவனத்துடனான வேறு ஏதாவது ஒப்பந்தகளின் கீழ் கடன் பெறுபவர்/பிணையாளர் ஏதாவது கட்டணத்தைத் தவறவிட்டால்; அல்லது

n. கடன் பெறுபவர், இந்தக் கடன் ஒப்பந்தத்தின் கீழ் அல்லது தொடர்புடைய வேறு ஏதாவது ஆவணத்தின்படி, தனது கடமைகளைச் செய்வது சட்ட விரோதமானதாக மாறினால் அல்லது பிணையாளர் அல்லது வேறு ஏதாவது நபர் (கடன் பெறுபவரை உள்ளடக்குகிறது) இந்த ஒப்பந்தத்தின் கீழ் தனது கடமைகள் எதையாவது செய்வது சட்ட விரோதமானதாக மாறினால்; அல்லது

o. இந்தக் கடன் ஒப்பந்தம் அல்லது வேறு ஏதாவது தொடர்புடைய ஆவணத்தை கடன் பெறுபவர்/பிணையாளர் ஏற்க மறுக்கிறார் அல்லது ஏற்க மறுக்கும் நோக்கத்தை வெளிப்படுத்துகிறார்; அல்லது

p. கடன் தொகை அல்லது அதன் ஒரு பகுதி, கடன் பெறுபவர் விண்ணப்பித்து, நிறுவனத்தால் அனுமதிக்கப்பட்ட நோக்கம் தவிர வேறு நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்பட்டால்; அல்லது

q. ஏதாவது ஒரு நிகழ்வு அல்லது தொடர்ச்சியான நிகழ்வுகள் நடந்து, அது கடன் பெறுபவரின் திருப்பிச் செலுத்தும் திறனை குறிப்பிடத்தக்க விதத்தில் மோசமாகப் பாதிக்கும் நியாயமான சாத்தியம் உள்ளது என்று நிறுவனம் கருதினால்; அல்லது

r. கடன் பெறுபவர்/பிணையாளரின் நிலை குடியிருப்பவர் என்பதிலிருந்து குடியில்லாதவர் என்று மாறுகிறது; அல்லது

s. கடன் பெறுபவர்/பிணையாளருக்கு எதிராக ஏதாவது பறிமுதல், அபாயம், தண்டனை அல்லது வேறு நடைமுறை அமல்படுத்தப்பட்டால் அல்லது விதிக்கப்பட்டால்; அல்லது

t. கடன் பெறுபவர் அல்லது பிணையாளர், ஏதாவது குற்றத்துக்காக ஏதாவது நீதிமன்றம் அலது அரசு அதிகாரிகளால், குற்றம் சாட்டப்பட்டால் அல்லது தண்டிக்கப்பட்டால்; அல்லது

u. கடன் பெறுபவர்/பிணையாளர், நிறுவனத்துடன் அல்லது அதன் துணை நிறுவனங்களுடன் மேற்கொண்ட இந்த அல்லது வேறு ஏதாவது ஒப்பந்தத்தின் ஏதாவது விதிமுறைகளை சர்ச்சையாக்கினால்; அல்லது

v. கட்டணம் செலுத்தத் தவறும் ஏதாவது நிகழ்வில் அல்லது தவறுதலை ஏற்படுத்தக்கூடிய ஒரு நிகழ்வில், அத்தகைய ஒரு நிகழ்வு நடந்த 3 (மூன்று) நாட்களுக்குள் கடன் பெறுபவர் உடனடியாக அது குறித்து நிறுவனத்துக்கு எழுத்துபூர்வ அறிவிப்பு வழங்க வேண்டும். 2013 நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் தொழில் நிறுத்துவதற்கான சட்டபூர்வ அறிவிப்பைப் பெற்றால் அல்லது பெறும்போது, அல்லது கடன் பெறுபவர்/பிணையாளருக்கு எதிராக வேறு ஏதாவது சட்டம் அல்லது சட்டச் செயல்முறை தாக்கல் செய்யப்படுவது/துவக்கப்படுவது குறித்த அறிவிப்பை கடன் பெறுபவர்/பிணையாளர் பெற்றால், அத்தகைய அறிவிப்பு பெறப்பட்ட 3 (மூன்று) நாட்களுக்குள் கடன் பெறுபவர்/பிணையாளர் நிறுவனத்துக்கு உடனடியாகத் தெரிவிக்க வேண்டும்; அல்லது

w. ஒருவேளை கடன் பெறுபவர் ஒரு நிறுவனமாக இருப்பின், வேண்டுமென்றே கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்களின் பட்டியலில் பெயருள்ள ஒருவரை அது தனது இயக்குனர்கள் குழுவில் சேர்க்கக்கூடாது, ஒருவேளை அத்தகைய ஒரு நபர் அதன் குழுவில் இருப்பது கண்டறியப்பட்டால் அந்த நபரைத் தனது இயக்குனர்கள் குழுவிலிருந்து அகற்றுவதற்கு; அல்லது தொழிலை மாற்றுவதற்கு, அல்லது ஏதாவது புதிய தொழிலில் அல்லது தொழில்வரிசையில் நுழைவதற்கு அல்லது நிர்வாகத்தில் குறிப்பிடத்தக்க ஏதாவது மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு விரைவான மற்றும் பயனுள்ள நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்; அல்லது

x. மேற்கூறிய ஏதாவது நிகழ்வுகள்/சூழ்நிலைகள் நிகழ்ந்ததா என்ற கேள்விக்கு நிறுவனத்தின் முடிவே இறுதியானது, முடிவானது மற்றும் கடன் பெறுபவர்/பிணையாளரைக் கட்டுப்படுத்துவதாக அமையும்.

y. பிணையாளர்/கள் வழங்கிய உத்தரவாதத்தில் ஏதாவது குறைபாடு/பலவீனம் இருப்பது, உத்தரவாதத்தை பயனற்றதாக/செயலற்றதாக மாற்றும்.

11. நிறுத்திவைத்தல் மற்றும் நிறுவனத்தின் பிற உரிமைகள்:

(a)

1. அறிவிப்பு: கட்டணத்தைத் திரும்பச் செலுத்தத் தவறுதல் உள்ளிட்ட மேற்கூறிய ஏதாவது தவறும் நிகழ்வு நடந்தால், கடன் பெறுபவர்/பிணையாளர் நிறுவனத்தில் பதிவு செய்துள்ள அவரது முகவரியில் 7 நாள்

அறிவிப்பை வெளியிடச் செய்து, கடன் வசதியின் கீழ் பெறப்பட்ட முழுத்தொகையையும் செலுத்தி கடனை முழுமையாக முடிக்குமாறு நிறுவனம் கேட்கலாம். அவ்வாறு அனுப்பப்பட்ட அறிவிப்பு ஏதாவது ஒரு காரணத்தால் வழங்கப்படாமல் திரும்பி வந்தாலும்கூட, அந்த அறிவிப்பு அனுப்பப்பட்டதிலிருந்து இரண்டாவது வேலை நாள் அல்லது பெறப்பட்ட தேதி, இவற்றில் எது முதலில் வருகிறதோ அன்று கடன் பெறுபவர்/பிணையாளருக்கு வழங்கப்பட்டதாகக் கருதப்படும் என்பதுடன், அந்த அறிவிப்பை கடன்பெறுபவர்/பிணையாளருக்கு அனுப்பியதாக நிறுவனத்தின் எந்தவொரு அதிகாரப்பூர்வ அதிகாரி உறுதிப்படுத்தினாலும் அதுவே இறுதியானதாகவும், இது தொடர்பாகக் கட்டுப்படுத்துவதாகவும் அமையும்.

2. அறிவிப்பு விலக்கம்: , பிரிவு 10 ((c), (d), (j), (k), (n), (r), (s) மற்றும் (t)ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ள தவறும் நிகழ்வுகள் ஏதாவது நிகழும்பட்சத்தில், இந்தக் கடன் ஒப்பந்தத்தில் முரண்பாடாக உள்ள எதையும் கருத்தில்கொள்ளாமல், மேலே குறிப்பிட்டுள்ள அறிவிப்புகளை நிறுவனத்தின் விருப்பத்தின்பேரில் விலக்கலாம்.

(b) நிறுத்திவைத்தல்:

கடன் ஒப்பந்தத்தை நிறுவனம் நிறுத்திவைக்கும் போது:

1. தவணைகள், அபராதக் கட்டணங்கள் அல்லது வேறு ஏதாவது ஒரு கணக்கில் ஏற்கனவே நிலுவையிலுள்ள தொகையையும் சேர்த்து மீதி செலுத்த வேண்டிய தொகையை தவணைகளாகச் செலுத்தும் வசதியைப் பெறும் உரிமை கடன் பெறுபவர் மற்றும் பிணையாளருக்கு இல்லை.

2. ஆணை நிராகரிப்புக் கட்டணங்கள், அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விகிதத்தில், நிறுத்தி வைக்கப்பட்ட தேதியிலிருந்து கட்டணத்தை முழுமையாகப் பெறும் தேதிவரை கணக்கிடப்பட்ட அபராதக் கட்டணங்கள் மற்றும் வேறு ஏதாவது கட்டணங்களைச் செலுத்த வேண்டிய பொறுப்பு கடன் பெறுபவருக்கு உண்டு.

3. கடன் நிலுவையில் இருக்கும் சமயத்தில் நிறுவனத்துக்கு கிடைக்கக்கூடிய பிற உரிமைகள் மற்றும் தீர்வுகளை 1881 பேச்சுவார்த்தைக்குட்பட்ட கருவிகள் சட்டத்தின் பிரிவு 138 மற்றும் 2007 பணம் செலுத்தல் மற்றும் தீர்வு அமைப்புகள் சட்டத்தின் பிரிவு 25இன் கீழ் வரம்பின்றிப் பயன்படுத்தல்.

(c) நிறுவனத்தின் பிற உரிமைகள்:

1. நிலுவையை மீட்பதற்கு ஏதாவது சட்டபூர்வ நடவடிக்கைகளைத் துவக்குவதற்கான நிறுவனத்தின் உரிமைகளுக்குப் பாரபட்சம் இல்லாமல், நிறுவனம் பொருத்தமானது எனக் கருதும் மூன்றாம் தரப்பினரை நியமிக்கும் உரிமை அதற்கு உண்டு என்பதையும், அத்தகைய மூன்றாம் தரப்பினர் கடன் பெறுபவரின் முன்கூட்டிய ஒப்புதலின்றி தவணைகளை வசூலிப்பதற்கான அதிகாரம் உள்பட, இந்தக் கடன் ஒப்பந்தத்தின் கீழ் நிறுவனத்தின் அனைத்து அல்லது ஏதாவது செயல்பாடுகள், உரிமைகள் மற்றும் அதிகாரங்களை நிறைவேற்றும் உரிமையை பெற்றுள்ளனர் என்பதை கடன் பெறுபவர் மற்றும் பிணையாளர் வெளிப்படையாக ஒப்புக் கொள்கிறார்கள்.

2. இந்தக் கடன் ஒப்பந்தத்தில் வேறு எங்காவது குறிப்பிட்டுள்ள எதையும் கருத்தில் கொள்ளாமல், அவ்வாறு நிறுத்தி வைத்தபிறகு கடனைத் தொடர்வது நிறுவனத்தின் தனிப்பட்ட மற்றும் முழுமையான விருப்பத்துக்கு உட்பட்டது என்பதுடன், கடன் பெறுபவர் செலுத்த வேண்டிய நிலுவையை, தொடர்புடைய நேரத்தில் நிறுவனத்தால் தீர்மானிக்கப்படுமாறு நிறுவனத்துக்குச் செலுத்த வேண்டும். நிறுவனம், எந்த நேரத்தில் வேண்டுமானாலும், தனது தனிப்பட்ட விருப்பத்தின்பேரில், எவ்விதக் காரணமும் தராமல், கடன் பெறுபவரது நிலுவையைத் திருப்பிச் செலுத்துமாறு கடன் பெறுபவரிடம் கூறலாம், அவ்வாறு கூறப்பட்டவுடன் கடன் பெற்றவர் உடனடியாக, எவ்விதத் தாமதமும் இன்றி

நிலுவையிலுள்ள தொகை முழுவதையும் செலுத்த வேண்டும். கடன் பெறுபவர் செலுத்த வேண்டும் அவரிடம் என்று கூறப்படும் நிலுவைத் தொகையே இறுதியானது மற்றும் அவரைக் கட்டுப்படுத்துவது.

3. இந்தக் கடன் மற்றும்/அல்லது கடன் பெறுபவரின் பிற நிதிப் பரிவர்த்தனைகள் குறித்து ஏதாவது சந்தேகம், தவறு செய்ததற்கான அல்லது மோசடி நடவடிக்கைக்கான அறிகுறி இருந்தால், தனது பணியாளர்(கள்), முகவர்(கள்) மூலம் தணிக்கை நடத்த மற்றும்/அல்லது நிறுவனம் விரும்பும் வெளிப்புறத் தணிக்கையாளர்(கள்)/கணக்காளர்(கள்) மூலம் கடன் பெறுபவரின் செலவில் வெளிப்புறத் தணிக்கை நடத்துவதற்கான உரிமை நிறுவனத்துக்கு உண்டு. நிறுவனத்தின் பணியாளர்(கள்), முகவர்(கள்), கணக்காளர்(கள்)/தணிக்கையாளர்(கள்), தனது அலுவலகம்(கள்)/வளாகங்கள் மற்றும் பதிவேடுகளை அணுகவும், அந்தத் தணிக்கையின் நோக்கத்துக்காக அவர்களுக்குத் தேவையான எந்தவொரு தகவல்கள்/பதிவேடுகளை வழங்கவும் கடன் பெறுபவர் அனுமதிக்க வேண்டும். நிறுவனம் தனது பணியாளர்(கள்), முகவர்(கள்) மற்றும்/அல்லது வெளிப்புற தணிக்கையாளர்(கள்)/கணக்காளர்(கள்) ஆகியோரிடமிருந்து பெறும் தணிக்கை அறிக்கை(கள்) அடிப்படையில் அல்லது நிறுவனத்திடமுள்ள தொடர்புடைய பொருட்கள்/பதிவேடுகள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட தணிக்கை அறிக்கை(கள்) தெளிவற்றதாக அல்லது கடன் பெறுபவரின் ஒத்துழைப்பின்மை காரணமாக தாமதமாகும் நிகழ்வின், அதன் சொந்த விசாரணை/மதிப்பீட்டின் அடிப்படையில், அந்தக் கடன் கணக்கை மோசடி அல்லது வேறு விதமானது என்று நிறுவனம் முடிவு செய்யலாம். கடன் கணக்கை மோசடி அல்லது வேறு விதமானது என்று முடிவு செய்வதில் நடைமுறையிலுள்ள ஆர்பிஐ வழிகாட்டுதல்களை நிறுவனம் பின்பற்றும்.

4. கடன் பெறுபவர் ஒன்றுக்கும் மேற்பட்ட கடன் கணக்குகளை வைத்திருந்தால் அல்லது கடன் பெறுபவரின் குழு நிறுவனம்(கள்) நிறுவனத்திடம் கடன் கணக்குகளை வைத்திருந்து, கடன் பெறுபவரின் ஒரு கடன் கணக்கு மோசடியானது என்று நிறுவனத்தால் கண்டறியப்பட்டால், கடன் பெறுபவர்/கடன் பெறுபவரின் ஒன்று அல்லது மேற்பட்ட ஏற்பாட்டாளர்(கள்)/முழு நேர இயக்குனர்(கள்) பொதுவாக உள்ள அதன் குழு நிறுவனம்(கள்) தொடர்பான பிற கணக்குகளை ஆய்வு செய்ய/மேற்கூறிய தணிக்கைகளை நடத்துவதற்கான உரிமை நிறுவனத்துக்கு உண்டு,

5. கடன் பெறுபவர்/அதன் குழு நிறுவனங்களின் கடன் கணக்குகளில் மோசடி நடவடிக்கைகளைப் காவல்துறை, தொடர்புடைய பிற அதிகாரிகள் மற்றும்/அல்லது ஆர்பிஐ போன்ற சட்ட அமலாக்க அமைப்பு(கள்) வசம் புகார் செய்வதற்கான உரிமையும் நிறுவனத்துக்கு உண்டு.

12. கையகப்படுத்தல்:

(a) இந்தக் கடன் ஒப்பந்தத்தின் கீழ் நிலுவையில் உள்ள மற்றும் செலுத்த வேண்டிய எந்தவொரு கட்டணம் மற்றும் நிறுவனம் பொருத்தமானது எனக் கருதும் எந்த வரிசையிலும், தவணைகளுக்காக கடன் பெறுபவர் செலுத்திய கட்டணத்தை பின்வரும் காரணங்களுக்காகக் கையகப்படுத்தும் உரிமையை நிறுவனம் கொண்டிருக்கும்:

1. செலுத்தவேண்டிய அசலுக்காக.

2. வட்டி.

3. அபராதக் கட்டணங்கள், ஏதும் இருப்பின்.

4. தொகைகள், கட்டணங்கள், செலவுகள் மற்றும் பிற தொகைகள் மீதான வட்டி.

5. தொகைகள், கட்டணங்கள், செலவுகள் மற்றும் பிற தொகைகள்.

கடன் பெறுபவர்/பிணையாளர், இந்தக் கடன் ஒப்பந்தம் தவிர வேறு ஏதாவது கடன் அல்லது பிற ஒப்பந்தங்களை நிறுவனத்துடன், தன் பெயரில் அல்லது தனது/தங்களது நியமனதாரர்கள் அல்லது பிரதிநிதிகளின் பெயரில், கடன் பெறுபவராக/வாடகைக்கு எடுப்பவராக/குத்தகைதாரராக அல்லது பிணையாளராக

செய்துகொண்டிருந்தால் அல்லது எதிர்காலத்தில் செய்துகொண்டால், இங்குள்ள தரப்பினருக்கு இடையில் குறிப்பாக இவ்வாறு ஒப்புக்கொள்ளப்படுகிறது;

(b) இந்தக் கடன் ஒப்பந்தத்தின் கீழ், நிகழ்வுக்கேற்றப்படி கடன் பெறுபவர்/பிணையாளர் அல்லது அவரது/அவர்களது நியமனதாரர்கள், பிரதிநிதிகளால் செலுத்தப்படும் எந்தவொரு கட்டணமும் "கணக்கில் செலுத்தப்பட்ட கட்டணம்" என்று மட்டுமே கருதப்படும் என்பதுடன், கடன் பெறுபவர், நிறுவனத்துக்கான அவரது/அவர்களது நியமனதாரர்கள் அல்லது பிரதிநிதிகள் செய்து கொண்ட எந்தவொரு ஒப்பந்தத்துக்குமான கணக்குக்கும் நிறுவனம் தனது தனிப்பட்ட விருப்பத்தின்பேரில் கையகப்படுத்தும், அது அதற்கு முரணாக ஏதாவது குறிப்பிட்ட அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தாலும் அதைக் கணக்கில் கொள்ளாமல் நிறுவனம் பொருத்தமானது எனக் கருதுமாறு ஒப்பந்த காலத்திலோ அல்லது அதற்குப் பிறகோ இருக்கலாம்,.

13. கடன் பெறுபவர் மற்றும் பிணையாளரின் உடன்படிக்கைகள் மற்றும் கூற்றுகள்:

கடன் பெறுபவர் மற்றும் பிணையாளர் இதன் மூலம் நிறுவனத்துக்குப் பின்வருமாறு உறுதிப்படுத்தி, ஏற்றுக்கொண்டு, உறுதியளிக்கிறார்கள்

a. கடன் பெறுபவர் மற்றும் பிணையாளர் ஆகியோர் இந்தியக் குடியுரிமை பெற்று சாதாரணமாக இந்தியாவில் வசிப்பவர்கள் என்றும், இந்தக் கடனின் காலத்தின்போது அவ்வாறே தொடர்வார்கள்.

b. இந்தக் கடன் ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்குத் தேவையான சட்டபூர்வ திறனை கடன் பெறுபவர்/பிணையாளர் பெற்றுள்ளார். இந்தக் கடன் ஒப்பந்தத்தில் கூறப்பட்ட முறையில் கடமைகளைச் செயல்படுத்தவும், மேற்கொள்ளவும் கடன் பெறுபவர்/பிணையாளர் எந்தவொரு சட்டம், இயற்றப்பட்ட சட்டம், தீர்ப்பு, ஆணை, ஒப்பந்தம் அல்லது வேறு விதமாக தடை செய்யப்படவோ, தடுக்கப்படவோ இல்லை. இந்தக் கடன் ஒப்பந்தம், செயல்படுத்தப்படும்போது.செல்லுபடியாகக்கூடியதாகவும், கடன் பெறுபவர்/பிணையாளரை சட்டபூர்வமாகக் கட்டுப்படுத்தும் உறுதிப்பாடாகவும், அது இந்தக் கடன் ஒப்பந்த விதிமுறைகளின்படி அவருக்கு எதிராக அமல்படுத்தக்கூடியதாகவும் இருக்கும். கடன் பெறுபவர்/பிணையாளர் (ஒருவேளை ஒரு நிறுவனம்/கூட்டு நிறுவனம்/பிற கார்ப்பரேட் அமைப்பாக இருந்தால்) இந்தியச் சட்டங்களின்படி முறையாக நிறுவப்பட்டு, செயல்பட்டு வருகிறார், தான் ஒரு தரப்பாக உள்ள இந்தக் கடன் ஒப்பந்தம் செய்து கொள்வதற்குப் போதிய அதிகாரமும், ஆற்றலும் உள்ளதுடன், அதன் பிரதிநிதிகளும் போதிய அதிகாரம் பெற்றுள்ளனர்.

c. இந்தக் கடன் ஒப்பந்தத்தைச் செயல்படுத்துவது, எந்தவொரு சட்டம்/அரசியலமைப்பு ஆவணங்களுடன் அல்லது கடன் பெறுபவர்/பிணையாளரைக் கட்டுப்படுத்தும் வேறு எந்தவொரு ஆவணத்துடன் முரண்பட்டு அமையாது.

d. இந்தக் கடன் ஒப்பந்தம் தொடர்பாகத் தேவையான அனைத்து அங்கீகாரங்கள், ஒப்புதல்கள், சம்மதங்கள், உரிமங்கள் மற்றும் அனுமதிகள் அனைத்துக்கும் முழு அதிகாரம் மற்றும் விளைவைத் தரத்தேவையான அனைத்தையும் கடன் பெறுபவர்/பிணையாளர் பெற்றுள்ளார் மற்றும் செய்துள்ளார்.

e. நிறுவனம் அல்லது நிறுவனத்தின் வேறு ஏதாவது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியால் அனுப்பப்பட்ட கணக்கு அறிக்கைகள், கடன் பெறுபவர் மற்றும் பிணையாளரால் ஏற்கத்தக்கதாக இருப்பதுடன், கடன் பெறுபவர் செலுத்த வேண்டி நிலுவையில் உள்ளதாகக் கோரப்படும் எந்தவொரு தொகையின் சரியான தன்மைக்கான உறுதியான சான்றாக இருக்கும்.

f. எந்தவொரு தகவல் தொடர்பும் கடன் பெறுபவர்/பிணையாளர் வழங்கிய முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும் என்பதுடன், அது அனுப்பப்பட்ட தேதியிலிருந்து 2 நாட்களுக்குள் முகவரியிடப்பட்ட நபருக்கு வழங்கப்பட்டதாகக் கருதப்படும் என்பதுடன், கடன் பெறுபவர் மற்றும் பிணையாளரின் முகவரியில் ஏதாவது மாற்றம் ஏற்படும் நிகழ்வில் அவர்கள் அதை உடனடியாக நிறுவனத்துக்குத் தெரிவிக்க வேண்டும், அவ்வாறு செய்யத் தவறினால் அவர்கள் கடைசியாக வழங்கிய முகவரிக்கு அனுப்பப்படும் எந்தவொரு அறிவிப்பு அல்லது தகவல் தொடர்பும் அவர்களுக்கு வழங்கப்பட்டதாகவே கருதப்படும்.

g. இந்தக் கடன் ஒப்பந்தத்தின் கீழ் நிறுவனத்தின் உரிமை மற்றும் கடமைகளை, நிறுவனம் தீர்மானிக்கும் விதமாகவும், விதிமுறைகளின்படியும், கடன் பெறுபவர்/பிணையாளருக்கு எவ்வித அறிவிப்பின்றியும், நிறுவனம் தேர்வு செய்யும் எந்தவொரு நபர்(களுக்கு) முழுமையாகவோ, பகுதியாகவோ விற்க, ஒதுக்க அல்லது மாற்றம் செய்யும் உரிமை நிறுவனத்துக்கு உண்டு என்பதுடன், அத்தகைய விற்பனை, ஒதுக்கீடு அல்லது மாற்றம் கடன் பெறுபவர்/பிணையாளரைக் கட்டுப்படுத்துவதாக அமைவதுடன், இந்தக் கடன் ஒப்பந்தத்தின் பலன் அல்லது கடமையை நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஒதுக்கீடு செய்வதற்கான உரிமை அவர்களுக்கு இல்லை.

h. கடன் பெறுபவரின் பிரதிநிதியாக உள்ள நபருக்கு கடன் வாங்கும் அதிகாரம் இல்லாமை அல்லது பலவீனமாக இருப்பது அல்லது அந்தச் செயல்பாட்டில் ஏதாவது முறைகேடு இருப்பது, அவ்வாறு அதிகாரம் இல்லாமை, பலவீனம் அல்லது முறைகேட்டை கருத்தில் கொள்ளாமல், கடன் பெறுபவர் மற்றும் பிணையாளருக்கு எதிராக நிறுவனத்துக்கு உள்ள உரிமைகளைப் பாதிக்காது.

i. கடன் பெறுபவர்/பிணையாளர் செலுத்த வேண்டிய அனைத்துத் தொகைகள் மற்றும் சட்டபூர்வ தவணைகளைச் செலுத்திவிட்டார், மேலும், எந்தவொரு நபர் அல்லது அதிகாரியிடமிருந்தும் எந்தவொரு கேட்பு, கோரிக்கை அல்லது அறிவிப்பைப் பெறவில்லை. மேலும், பரிவர்த்தனை தொடர்பாக தற்போதைய மற்றும் எதிர்கால வரிகள், மதிப்பீடுகள், விலைகள், வரிகள், கட்டணங்கள் மற்றும் பிற விதிப்புகள், வெளியேற்றங்கள் மற்றும் கடமைகளை கடன் பெறுபவர் ஏற்பார் மற்றும் செலுத்துவார். மேலும், தவணைகள் அல்லது இங்குள்ள அல்லது இந்தக் கடன் ஒப்பந்தம் மேற்கொண்ட காரணத்தால் நிறுவனம் மேற்கொள்ளத் தேவைப்படும் பரிவர்த்தனை மீது அரசாங்க விதித்த அல்லது விதிக்கக்கூடிய எந்தவொரு விலைகள், கட்டணங்கள், விதிப்புகள் மற்றும்/அல்லது தொகைகளால் தவணைகள் தானாகவே அதிகரிக்கும்.

j. கடன் பெறுபவர்/பிணையாளர் மீது எந்தவொரு வழக்குகள், நடவடிக்கைகள் அல்லது இழப்பீடு எதுவும் நிலுவையில் இல்லை அல்லது (சிவில் அல்லது குற்றவியல் அல்லது வேறு) தாக்கல் செய்யப்படவோ அல்லது எடுக்கப்படவோ வாய்ப்பில்லை என்பதை உறுதி செய்கிறது.

k. வரிவிதிப்பு அல்லது வேறு ஏதாவது விஷயம் தொடர்பான எந்தவொரு சட்டம் தொடர்பாகவும் கடன் பெறுபவர்/பிணையாளரின் உரிமைகள் அல்லது நிலை குறித்த எந்தவொரு இழப்பீட்டுக்குமான கடமை நிறுவனத்துக்கு எவ்விதத்திலும் இல்லை என்பதை உறுதி செய்கிறது.

l. கடன் விண்ணப்பம் மற்றும் கீழே குறிப்பிடப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்ட நோக்கத்திற்காக மட்டுமே முழு கடனையும் பயன்படுத்த வேண்டும்; சட்டவிரோத / சமூக விரோத செயல்கள் மற்றும் ஊக நோக்கங்களுக்காக, மூலதன சந்தையில் முதலீடு செய்வது உட்பட (பங்குகள், பத்திரங்கள் மற்றும் பிற நிதி பாதுகாப்புகள்), நிலம், அல்லது தங்கம் வாங்குவது (முதன்மை தங்கம், தங்க கட்டிகள், தங்க நகைகள் / நாணயங்கள், விலைமதிப்புள்ள கற்கள் / உலோகங்கள், பரிமாற்ற வர்த்தக நிதி (ETF) அலகுகள் மற்றும் தங்க மியூச்சுவல் நிதி அலகுகள்) ஆகியவற்றிற்காக பயன்படுத்தக்கூடாது. இதைச் செய்ய வேண்டிய கட்டாயம் இல்லாமல், நிறுவனம் கடனின் இறுதி பயன்பாட்டை கண்காணிக்கும் உரிமையைப் பெறும், அதற்காக தேவையான சான்றிதழ்களுடன், நிறுவனத்தின் தனிப்பட்ட விருப்பப்படி நியமிக்கப்பட்ட கணக்காய்வாளர்கள் அல்லது ஆலோசகர்கள் மூலம், கடனாளியின் செலவில்.

m. பிற வங்கிகள், நிதி நிறுவனங்களிடமிருந்து எந்தவொரு தொகையையும் கடன் வாங்கும் முன் நிறுவனத்திடமிருந்து முன்கூட்டிய எழுத்துபூர்வ அனுமதியைப் பெற வேண்டும்.

n. தபால், தந்தி, டெலக்ஸ், பதிவுத் தபால்கள், தொலைபேசி அழைப்புகள், சட்டபூர்வ நடவடிக்கைகள் மற்றும் வசூலிப்பதற்காக நியமிக்கப்படும் பிரதிநிதிகளின் கூடுதல் செலவுகள் உள்பட, நிறுவனத்துக்கு வரவேண்டிய தொகையை வசூலிப்பதில் அல்லது அதற்கு எடுக்கப்படும் முயற்சிக்கான எந்தவொரு செலவையும் நிறுவனத்துக்கு செலுத்த வேண்டிய கடமை உண்டு.

o. கடன் பெறுபவர் வழங்கிய விவரங்கள், முன்வைத்தவை, அறிவிப்புகள் மற்றும் தகவல்கள் அனைத்தும் உண்மையானவை, சரியானவை, முழுமையானவை மற்றும் நாளது தேதி வரை புதுப்பிக்கப்பட்டவை, செல்லத்தக்கவை மற்றும் எல்லா வகையிலும் நிலைத்திருக்கக்கூடியவை என்பதுடன் எந்தத் தகவலும் மறைக்கப்படவில்லை. எங்கு தேவைப்பட்டாலும், தேவையான புதுப்பிப்புகளை கடன் பெறுபவர் வழங்குவார். கடன் பெறுபவருக்கு எதிராக துவக்கப்படும் எந்தவொரு வழக்கு, நடுவர் நியமனம், நிர்வாக அல்லது பிற செயல்முறைகள் குறித்து நிறுவனத்துக்கு உடனடியாக அறிவிப்பார்.

p. ஒருவேளை, கடன் பெறுபவர் ஒரு தனிநபராக இல்லாமல் ஒரு நிறுவனமாக இருப்பின், அது அவர்களைக் கட்டுப்படுத்தும் அனைத்துப் பொருத்தமான சட்டங்களுடனும் இணங்க வேண்டும்.

q. ஒருவேளை கடன் பெறுபவர் ஒரு நிறுவனமாக இருப்பின், மொத்தமாக வாங்கிய கடன்கள் பரிந்துரைக்கப்பட்ட எல்லைக்குள் இருந்தால், இந்த வசதியைப் பெறும் அதிகாரம் கடன் பெறுபவருக்கு உண்டு.

r. கடன் பெறுபவர், நிறுவனத்தால் அவ்வப்போது பரிந்துரைக்கப்படும் நிறுவனத்தின் விதிகளுடன் இணங்க வேண்டும் என்பதுடன், அவற்றால் கட்டுப்படுத்தப்படுவார்.

s. பிற்பாடு தொடங்கப்பட்ட அதுபோன்ற வேறு கணக்குகள் மற்றும் கடன் பெறுபவர்/பிணையாளருடன் தொடர்புடையதாகப் பிற்பாடு/ கண்டறியப்பட்டவை உள்பட, கடன் பெறுபவர்/பிணையாளரின் தொடர்புடைய அனைத்து கணக்குகள் மீதும் நிறுவனத்துக்கு உரிமை உண்டு (இது சம்மந்தமாக, தொடர்புடைய கணக்குகள் என்பது நிறுவனத்திடமிருந்து பெறப்படும் எந்தவொரு நிதி வசதியின் கீழும், கடன் பெறுபவர் பிணையாளராகவும், பிணையாளர் கடன் பெறுபவராகவும் உள்ள கணக்குகள் என்று பொருள்படும் மற்றும் அவற்றை உள்ளடக்கும்).

t. கடன் பெறுபவர்/பிணையாளர், தனது/தங்களது/அவர்களது குடும்ப உறுப்பினர்கள்/நெருங்கிய உறவினர்கள் யாரும், ஆர்பிஐ வழங்கிய கேஒய்சி வழிகாட்டல்களில் வரையறுக்கப்படுமாறு அரசியல் செல்வாக்கு உடையவர்கள் இல்லை என்று உறுதியளிக்கிறார். மேலுள்ள நிலையில் ஏதாவது மாற்றம் இருப்பின் அதை நிறுவனத்துக்கு உடனடியாகத் தெரிவிக்க, கடன் பெறுபவர் உறுதியளிக்கிறார்.

u. அவ்வப்போது நிறுவனம் வழங்கும் கடன் கொள்கைகளின் விலக்கப் பட்டியலில் உள்ள எந்தவொரு நடவடிக்கையிலும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஈடுபடுவதில்லை அல்லது நாட்டின் சமூக மற்றும் பொருளாதாரச் சூழ்நிலைக்கு ஆபத்து விளைவிக்கும் அல்லது மோசமாகப் பாதிக்கும் எந்தவொரு நடவடிக்கையிலும் ஈடுபடுவதில்லை என்று கடன் பெறுபவர் இதன் மூலம் உறுதியளிக்கிறார்.

v. நிகழ்வுக்கேற்றபடி கடன் பெறுபவர் மற்றும்/அல்லது பிணையாளரை வேண்டுமென்றே கடனைத் திருப்பிச் செலுத்தாதவர் என்று வகைப்படுத்தி அதை கடன் தகவல் நிறுவனங்களுக்குத் தெரிவித்து, வேண்டுமென்றே கடனைத் திருப்பிச் செலுத்தாதவரின் (கடன் பெறுபவர் மற்றும்/அல்லது பிணையாளரின் உரிமையாளர்கள்/பங்குதாரர்கள்/இயக்குனர்கள்/ ஏற்பாட்டாளர்கள்/ வேண்டுமென்றே கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறியவர் என்று அறிவிக்கப்பட்டவரின் விவகாரங்களை நிர்வகிப்பதற்கான/ பொறுப்பில் உள்ள பிணையாளர்/நபர்கள் உள்பட) பெயர், புகைப்படத்தை செய்தித்தாள்(கள்) மற்றும்/அல்லது அது பொருத்தமானது என்று கருதும் வேறு முறையில் அதன் தனிப்பட்ட விருப்பத்தின்பேரில், நடைமுறையில் உள்ள இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ) ஒழுங்குமுறைகளுக்கு இணங்கி வெளியிடும் உரிமை நிறுவனத்துக்கு உண்டு.

'வேண்டுமென்றே திருப்பிச் செலுத்தாதிருத்தல்' மற்றும் 'வேண்டுமென்றே திருப்பிச் செலுத்தத் தவறியவர்' ஆகிய சொற்பதங்கள், 2024 இந்திய ரிசர்வ் வங்கி (வேண்டுமென்றே திருப்பிச் செலுத்தத் தவறியவர் மற்றும் மிகப்பெரிய தொகையைச் செலுத்தத் தவறியவர்களை நடத்துதல்) வழிகாட்டுதல்களின் கீழ், அவ்வப்போது திருத்தப்பட்டு அல்லது ரத்து செய்யப்பட்டு, அதற்குக் கூறப்பட்ட பொருளைக் கொண்டிருக்கும்.

வேண்டுமென்றே திருப்பிச் செலுத்தத் தவறியவர் என்று வகைப்படுத்தலைப் பொறுத்தவரை, கடன் பெறுபவர் மற்றும் பிணையாளர் பின்வருமாறு மேலும் உடன்படுகிறார்கள்:

i. கடன் பெறுபவரோ, அதன் இயக்குனர்கள்/ஏற்பாட்டாளர்கள்/பங்குதாரர்கள்/ கடன் பெறுபவரின் விவகாரங்களை நிர்வகிக்கும் பொறுப்பில் இருப்பவர்கள் எவருமோ, வேண்டுமென்றே திருப்பிச் செலுத்தத் தவறியவர் என்று அறிவிக்கப்படவில்லை. வேண்டுமென்றே திருப்பிச் செலுத்தத் தவறியவர் என்று ஆர்பிஐ/சிஐசி பட்டியலில் பெயருள்ள ஒரு நபரை, கடன் பெறுபவர் ஒரு நிறுவனமாக இருந்தால் அதன் இயக்குனராக, அல்லது கூட்டு நிறுவனமாக இருந்தால், பங்குதாரராக அல்லது அதன் விவகாரங்களை நிர்வகிக்கும் பொறுப்புடையவராகச் சேர்க்கமாட்டார். அவ்வாறு நியமிக்கப்பட்டு, இயக்குனர்/பங்குதாரர்/கடன் பெறுபவருக்குப் பொறுப்பாளராகத் தொடரும் நபர் வேண்டுமென்றே கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறிய நபர் என்று கண்டறியப்பட்டால், கடன் பெறுபவர் அந்த நபரை இயக்குனர்/பங்குதாரர்/நிர்வாகத்துக்கான பொறுப்பிலிருந்து அகற்றுவதற்கு விரைவான மற்றும் பயனுள்ள நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். நிறுவனத்தின் ஏற்பாட்டாளர் மற்றும்/அல்லது இயக்குனர்(கள்) மற்றும்/அல்லது நிறுவன விவகாரங்களுக்கான பொறுப்பில் இருப்பவரின் பெயர், வேண்டுமென்றே கடனைத் திருப்பிச் செலுத்தத்தவறியவர்களின் பட்டியலில் இருக்கும்வரை, நிறுவனமானது எந்தச் சூழ்நிலையிலும் கடன் பெறுபவருக்கு வழங்கப்பட்ட வசதிகளை புதுப்பிக்க/மேம்படுத்த/ புதிய கடன் வசதிகளை வழங்க அல்லது தற்போதுள்ள வசதிகளை மறுகட்டமைப்பு செய்யாது என்பது தெளிவுபடுத்தப்படுகிறது.

ii. இந்தக் கடன் அல்லது அதன் ஏதாவது பகுதி, அது அனுமதிக்கப்பட்ட நோக்கத்துக்காக மட்டுமே பயன்படுத்தபட வேண்டும், வேறு ஏதாவது நோக்கங்களுக்காக "திசை திருப்பப்பட" அல்லது "எடுக்கப்பட" அல்லது பயன்படுத்தப்படக்கூடாது. கடன் பெறுபவரால் நிதி திசை திருப்பப்படுதல்/எடுக்கப்படுதல் குறித்து கடன் பெறுபவரின் தணிக்கையாளர்(கள்) குறிப்பான சான்றளிக்க வேண்டும் என்று நிறுவனம் விரும்பினால், அந்த நோக்கத்துக்காக கடன் பெறுபவரின் தணிக்கையாளர்(கள்)-க்கு தனி ஆணை வழங்குவதற்கான உரிமையை நிறுவனம் பெற்றுள்ளது. இருப்பினும், நிதியை திசை திருப்புவது/எடுப்பதைச் சோதிப்பதற்காக நிறுவனம் விரும்பும் தனது பணியாளர்(கள்)/பட்டயக் கணக்காளர்(கள்)/தணிக்கையாளர்கள் யாராவது ஒருவரைக் கொண்டு, கடன் பெறுபவரின் செலவில், கடன் பெறுபவரின் கணக்குகளைத் தணிக்கை செய்யவேண்டும் என்று நிறுவனம் விரும்பினால் அது நிறுவனத்தின் உரிமைகளுக்கு உட்பட்டதாகவே இருக்கும். நிறுவனத்தின் பணியாளர்(கள்), பட்டயக் கணக்காளர்(கள்)/தணிக்கையாளர்(கள்), தனது அலுவலகம்(கள்)/வளாகங்கள் மற்றும் பதிவேடுகளை அணுகவும், அந்தத் தணிக்கையின் நோக்கத்துக்காக அவர்களுக்குத் தேவையான எந்தவொரு தகவல்கள்/பதிவேடுகளை வழங்கவும் கடன் பெறுபவர் அனுமதிக்க வேண்டும்.

14. பிணையாளரின் பொறுப்புகள்:

a. தவணைத் தேதிகளில், தவணைத் தொகையைச் செலுத்த அல்லது இந்தக் கடன் ஒப்பந்தத்தின்கீழ் தனது பொறுகளில் ஏதாவது ஒன்றை நிறைவேற்ற கடன் பெறுபவர் தவறும் நிகழ்வில், அத்தகைய எந்தத் தொகையையும் எவ்வித சர்ச்சை அல்லது மறுப்பும் இன்றிச் செலுத்துவதற்குப் பிணையாளர் உறுதியளித்து, தன்னைப் பொறுப்பாக்குகிறார். இருப்பினும், தவறும் நிகழ்வு ஏற்பட்டு, நிறுவனம் கோரிக்கை விடுக்கத் தவறினால் அல்லது தாமதம் செய்தால், அது இந்தக் கடன் ஒப்பந்தத்தின் கீழ் பிணையாளரை பொறுப்பிலிருந்து விடுவிக்காது.

b. இதன் கீழ் பிணையாளரின் பொறுப்பானது, , தவணைகள், வட்டி, அபராதத் தொகைகள், கட்டணங்கள், செலவுகள் மற்றும் இந்தக் கடன் ஒப்பந்தத்தின்கீழ் கடன் பெறுபவர், நிறுவனத்துக்குச் செலுத்த வேண்டியுள்ள வேறு ஏதாவது தவணைகள் உள்பட நிலுவையிலுள்ள அனைத்துத் தொகைகளுக்கும், கடன் பெறுபவருக்கான அதே அளவு பொறுப்புடையதாக இருக்கும்.

c. பிணையாளர் தனது பொறுப்பு ஒரு முதன்மை கடனாளியின் பொறுப்பாக இருக்கும் என்றும், வெறுமனே உத்தரவாதம் தந்தவராக மட்டும் இருக்காது என்றும் ஒப்புக் கொள்கிறார். மேலும் இந்தக் கடன் ஒப்பந்தத்தின் கீழ் அல்லது உருவாக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள எந்தவொரு பிணையத்தைப் பொறுத்தும் காட்டப்படும் ஏதாவது சலுகை அல்லது பொறுமையின் காரணமாகவும், கடன் வாங்கியவருக்கு நிறுவனம் வழங்கும் எந்தவொரு வசதி அல்லது கால அவகாசம் காரணமாகவும் அந்த உத்தரவாதம் பாதிக்கப்படாது அல்லது நீக்கப்படாது. அவ்வாறு வழங்கப்பட்ட வசதி, கால அவகாசம் அல்லது அல்லது சலுகை அல்லது காட்டப்படும் பொறுமை ஆகியவை பிணையாளருக்கு முறையான அறிவிப்பு கொடுக்கப்பட்ட பின்னரும் அவரது சம்மதத்துடனும் வழங்கப்பட்டதாக கருதப்படும் என்று இந்தப் பிணையாளர் மேலும் ஒப்புக்கொள்கிறார்.

d. நிறுவனம் மற்றும் மற்றொரு பிணையாளருக்கு இடையில் ஏதாவது ஏற்பாடு எட்டப்பட்டிருந்தால், அதைக் கணக்கில் கொள்ளாமல், பிணையாளருக்கு எதிரான நிறுவனத்தின் உரிமைகள் முழு அதிகாரத்தையும், விளைவையும் கொண்டிருக்கும், அல்லது மற்றவரின் அந்தப் பொறுப்பு விடுவிக்கப்படுவதைக் கணக்கில் கொள்ளாமல், கூறப்பட்ட கடமைகளை மேற்கொள்வதற்கான பொறுப்பு எல்லா நேரங்களிலும் பிணையாளருக்கு மட்டுமே தனிப்பட்ட முறையில் உண்டு என்பதைப் போல், இங்குள்ள பிணையாளரின் கடமைகள், எல்லா விதத்திலும் அதே அளவுக்கு செய்ய வேண்டும் என்று கூறும் சுதந்திரம் நிறுவனத்துக்கு உண்டு.

e. தனது ஒப்புதல்/சம்மதம் இல்லாமல், இந்தக் கடன் ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மாற்ற, திருத்த அல்லது மாற்றியமைப்பதற்கும், , குறிப்பாக, இந்தக் கடன் ஒப்பந்தத்தின் விதிகளின்படி வட்டி விகிதத்தை அதிகரித்தல் உள்பட, நிறுவனத்தால் தேவை எனக் கருதப்படும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் பேரில் கடனைத் திருப்பிச் செலுத்துவதை மற்றும்/அல்லது கடன் பெறுபவர் நிறுவனத்துக்குச் செலுத்த வேண்டிய வட்டி மற்றும் பிற தொகைகளை ஒத்தி வைக்க, தள்ளிப் போட அல்லது மாற்றியமைக்கும் சுதந்திரம் கடன் பெறுபவருக்கும், நிறுவனத்துக்கும் உண்டு என்பதற்கு பிணையாளர் இதன்மூலம் ஒப்புக் கொள்கிறார்.

f. பிணையாளருக்கு எவ்வித அறிவிப்பும் தராமலும், இந்த உத்தரவாதத்தை எவ்விதத்திலும் பாதிக்காமலும், எந்த நேரத்திலும், எவ்விதமாகவும், இந்தக் கடன் ஒப்பந்தத்தின் கீழ் நிறுவனம் பெற்றுள்ள அதிகாரம் அல்லது ஒதுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பேரில் கடன் பெறுபவர், நிறுவனத்துக்குச் செலுத்தவேண்டிய தவணைகள் அல்லது வேறு தொகைகள் அல்லது ஏதாவது தீர்வுகளைக் கட்டாயப்படுத்தவோ, கட்டாயப்படுத்துவதை நிறுத்தவோ, கடன் பெறுபவருடன் ஏதாவது ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ள, ஏற்பாடு செய்ய அல்லது கால அவகாசம் அல்லது சலுகை அல்லது வசதியை வழங்குவதற்கு நிறுவனம் முழுச் சுதந்திரம் கொண்டிருக்கும், மேலே குறிப்பிட்டுள்ள நிறுவனத்தின் சுதந்திரத்தைப் பயன்படுத்துவது அல்லது நிறுவனத்தின் ஏதாவது ஒரு செயல் அல்லது விடுபடுதல் அல்லது இந்தப் பிரிவு இல்லையென்றால் பிணையாளரை விடுவித்திருக்கக்கூடிய வேறு ஏதாவது விவகாரம் அல்லது விஷயம் எதுவாக இருப்பினும் உத்தரவாதங்கள் தொடர்பான சட்டத்தின் கீழ் பிணையாளரை விடுவித்திருக்கும் விளைவைக் கொண்டிருக்கக்கூடிய வேறு எதுவும் பிணையாளரை விடுவிக்காது என்பதுடன், பிணையாளர் வேறுவிதமாகச் செயல்படுத்த உரிமையுள்ள அனைத்து உத்தரவாதம் மற்றும் பிற உரிமைகளை இந்த உத்தரவாதத்தின் எந்தவொரு பிரிவையும் செயல்படுத்துவதற்காகத் தேவையானவாறு நிறுவனத்துக்குச் சாதகமாக பிணையாளர் இதன்மூலம் விட்டுத் தருகிறார்

g. இந்த உத்தரவாதம் குறித்து பிணையாளருக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படும் சமயத்தில் கடனைச் செலுத்துவதற்கான ஏதாவது பத்திரம் அல்லது பத்திரங்கள் நிலுவையில் இருந்தாலும், பணமாக மாற்றப்படாமல் இருந்தாலும், தொலைந்திருந்தாலும் பிணையாளருக்கு எதிராக இந்த உத்தரவாதத்தை செயல்படுத்த இயலும்

h. முறையாகச் சான்றளிக்கப்பட்ட நிறுவனத்தின் கணக்கு அறிக்கையின் பிரதி, இந்தக் கடன் ஒப்பந்தத்தின்கீழ் நிலுவையிலுள்ள மற்றும் செலுத்த வேண்டிய தொகையாக பிணையாளரைக் கட்டுப்படுத்தும் என்று பிணையாளர் ஒப்புக் கொள்கிறார்.

i. கடன் பெறுபவர் திவாலாதல் அல்லது கடன் பெறுபவர் திவால் ஆவதற்கான விண்ணப்பம் அல்லது தீர்மானம் அல்லது ஆணை வைக்கப்படுதல், பிறப்பிக்கப்படுதல் அல்லது செயல்படுத்தப்படுதல் அல்லது நிறுவனம் அல்லது கடன் பெறுபவரின் அமைப்பில் ஏதாவது மாற்றம் இதன் கீழுள்ள பிணையாளரின் பொறுப்பை எவ்விதத்திலும் பாதிக்காது

j. இந்தக் கடனுடன் சேர்த்து மேலும் கடன் அல்லது வசதிகளைப் பெற மற்றும்/அல்லது இந்த உத்தரவாதம் செயலில் இருக்கும்போதே கடனைப் புதுப்பிக்கவும் கடன் பெறுபவருக்கு சுதந்திரம் உண்டு என்று பிணையாளர் இதன் மூலம் ஒப்புக்கொண்டு உறுதியளிக்கிறார், அவ்வாறு செய்யும்போது இங்குள்ள உத்தரவாதம் எவ்விதத்திலும் பாதிக்கப்படாது அல்லது மாறாது ஆனால் முழு அதிகாரத்துடனும், விளைவுடனும் இருந்து பிணையாளரைக் கட்டுப்படுத்தும்.

k. இந்தக் கடன் ஒப்பந்தத்தின்கீழ் கட்டணம் செலுத்துமாறு பிணையாளரைக் கேட்கும்முன் நிறுவனம் தனது உரிமைகள் அனைத்தையும் பயன்படுத்த அல்லது கடன் பெறுபவருக்கு எதிராக ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதற்கு பிணையாளர் ஒப்புக்கொள்கிறார்.

l. இந்தக் கடன் ஒப்பந்தத்தின் எந்தவொரு விதி அல்லது வேறு ஏதாவது தொடர்புடைய ஆவணம் தொடர்பாகம் நிறுவனத்துக்கும், கடன் பெறுபவருக்கும் இடையில் ஒரு சர்ச்சை நிலுவையில் இருப்பதைக் கணக்கில் கொள்ளாமல், நிறுவனத்தால் கோரப்படும்போது செலுத்த வேண்டிய நிலுவைக் கட்டணத்தைச் செலுத்த பிணையாளர் ஒப்புக் கொள்கிறார்.

m. இந்தக் கடன் ஒப்பந்தத்தின்கீழ் அவ்வப்போது செலுத்தத் தேவைப்பட்டு, செலுத்தப்படாமல் நிலுவையிலுள்ள எல்லா வட்டி, அபராதக் கட்டணங்கள், செலவுகள், கட்டணங்கள் மற்றும் அனைத்துத் தொகைகளோடு சேர்த்து கடனை முழுமையாகச் செலுத்தும் காலம் வரை இந்த உத்தரவாதம் தொடர்வதுடன், முழு அதிகாரத்துடனும், விளைவுடனும் இருக்கும்.

n. இந்தக் கடன் ஒப்பந்தத்திலுள்ள ஏதாவது குறைபாடு அல்லது இந்தக் கடன் ஒப்பந்தம் செல்லுபடியாகாதிருத்தல் மற்றும்/அல்லது முழுமையடையாத ஆவணங்கள் அல்லது ஒப்பந்தங்கள் ஆகியவற்றைக் கணக்கில் கொள்ளாமல், இந்த உத்தரவாதம் செல்லுபடியாகும் மற்றும் செயலில் இருக்கும் என்பதுடன், இந்த உத்தரவாதத்தை நிறைவேற்றுவதன் மூலம் மட்டுமே பிணையாளர் தனது கடமையிலிருந்து விடுவிக்கப்படுவார் என்பதற்கு பிணையாளர் ஒப்புக் கொள்கிறார்.

o. கடன் பெறுபவர், நிறுவனத்துக்குச் செலுத்தும் அல்லது வழங்கும் ஏதாவது தொகை மூலம் இந்த உத்தரவாதம் முழுமையாகவோ, பகுதியளவோ பூர்த்தியடையாது அல்லது நிறைவடையாது என்பதுடன், இந்தக் கடன் ஒப்பந்தத்தின்கீழ் நிறுவனத்துக்குச் செலுத்த வேண்டிய தொகை அனைத்தும் முழுமையாகத் திருப்பிச் செலுத்தப்படும் வரை செல்லத்தக்கதாகவும், பிணையாளரைக் கட்டுப்படுத்துவதாகவும், செயலிலும் இருக்கும்.

p. இந்த உத்தரவாதம் திரும்பப் பெற இயலாதது என்பதுடன், கடன் பெறுபவர், நிறுவனத்துக்குச் செலுத்த வேண்டிய வட்டி மற்றும் பிற செலவுகள் அனைத்தையும், தவணைகளோடு சேர்த்துச் செலுத்தும் காலம் வரை அந்தக் கடனைப் பாதுகாக்க நிறுவனமானது கார்ப்பரேட் அல்லது தனிப்பட்டது என்று வேறு ஏதாவது உத்தரவாதத்தைப் பெற்றிருந்தாலும், அதைக் கணக்கில் கொள்ளாமல் இந்த உத்தரவாதமானது முழு அதிகாரத்துடனும், விளைவுடனும் இருக்கும். இந்த உத்தரவாதமானது பிணையாளரின் வாரிசுகள், நிறைவேற்றாளர்கள் மற்றும் நிர்வாகிகளைக் கட்டுப்படுத்துவதாக அமையும்.

15. முன்கூட்டியே முடித்தல்:

a. நிறுவனமானது, தனது தனிப்பட்ட விருப்பத்தின் பேரிலும், முன்கூட்டியே முடித்தலுக்கு அது பரிந்துரைத்துள்ள அத்தகைய விதிமுறைகளின் அடிப்படையிலும், தவணைகளை விரைவுபடுத்தலை அனுமதிக்கலாம் அல்லது கடன் பெறுபவரின் வேண்டுகோளின் பேரில் கடனை முன்கூட்டியே முடிக்க அனுமதிக்கலாம்.

b. முன்கூட்டியே முடிக்கும் தனது எண்ணம் குறைந்தது 21 நாட்களுக்குமுன் நிறுவனத்துக்கு எழுத்துபூர்வ அறிவிப்பு கொடுப்பதன் மூலமும், இந்தக் கடன் ஒப்பந்தத்தின் கீழ் கடன் பெறுபவரால் ஒப்புக் கொள்ளப்பட்டு செலுத்தப்பட வேண்டியுள்ள, கடனின் பாக்கி அசல் தொகை, நிலுவைத் தவணைகள், வட்டி, அபராதக் கட்டணங்கள் மற்றும் பிற தொகைகள் அனைத்தையும் முழுமையாகச் செலுத்துவதன் மூலமும் கடன் பெறுபவர் மீதமுள்ள கடன் முழுவதையும் முன்கூட்டியே முடிக்கலாம். அட்டவணையில் குறிப்பிடப்பட்ட காலம் முடியும் வரை முன்கூட்டிய முடித்தல் செய்ய முடியாது.

c. முன்கூட்டியே முடிப்பதற்கு இந்தக் கடன் ஒப்பந்தத்தின் அட்டவணையில் பரிந்துரைக்கப்பட்டுள்ள கட்டணம் அல்லது அதற்கென நிறுவனத்தால் தீர்மானிக்கப்படும் கட்டணங்கள் பொருந்தும்.

d. அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முன்கூட்டியே முடித்தலுக்கான தொகையானது கணக்கு அறிக்கையில் காட்டப்பட்டுள்ள காசோலைகள்/ஆணைகள் பணமாக மாற்றப்பட்டது என்ற அனுமானம் மற்றும் கடன் ஒப்பந்தத்துக்கு அனைத்துக் கட்டணங்களும் செலுத்தப்பட்டுவிட்டது என்ற அனுமானத்தின் அடிப்படையிலானது, தவறும்பட்சத்தில் அதே நிலைக்கு மாற்றப்பட்டு, காசோலை/ஆணை நிராகரிப்புக் கட்டணங்கள், அபராதக் கட்டணங்கள் மற்றும் பொருந்தும் பிற கட்டணங்களுடன் சேர்த்துக் கட்டணம் செலுத்தவேண்டி வரும்.

16. அபராதக் கட்டணங்கள்:

நிறுத்தி வைத்தலுக்கான நிறுவனத்தின் உரிமைகள் மற்றும் இந்தக் கடன் ஒப்பந்தத்தின் கீழ் நிறுவனத்தின் வேறு ஏதாவது உரிமைகளுக்குப் பாரபட்சம் இல்லாமல், தவணைக/கள் அல்லது நிலுவையிலுள்ள வேறு ஏதாவது தொகைகளைச் செலுத்தத் தவறுதல் நிகழ்வு ஏற்படும்போது, நிலுவையான தொகைக்கான தவணைத் தேதியிலிருந்து, அந்தத் தொகையை முழுமையாகத் திருப்பிச் செலுத்தும் தேதி வரை நிறுவனத்தின் மனநிறைவுக்கு ("அபராதக் கட்டணங்கள்"), இங்குள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விகிதத்தில் செலுத்தத் தவறிய தொகைகள் மீது விதிக்கப்படும் அபராதக் கட்டணங்களை கடன் பெறுபவர்/பிணையாளர் நிறுவனத்துக்குச் செலுத்த வேண்டும்.

17. ஒதுக்கீடு மற்றும் பத்திரமாக்கல்:

a. இந்தக் கடன் ஒப்பந்தம் கடன் பெறுபவர் மற்றும் பிணையாளருக்குத் தனிப்பட்டது. இந்தக் கடன் ஒப்பந்தத்தின் கீழ் அதன் ஏதாவது உரிமைகள் அல்லது கடமைகள் அல்லது பலன்களை, நிறுவனத்தின் முன்கூட்டிய எழுத்துபூர்வ அனுமதியின்றி எந்தவொரு நபருக்கும் நேரடியாக அல்லது மறைமுகமாக, ஒதுக்குவதற்கு அல்லது மாற்றுவதற்கான உரிமை கடன் பெறுபவருக்கு அல்லது பிணையாளருக்கு இல்லை.

b. இந்தக் கடன் ஒப்பந்தத்தின் கீழ் தனது உரிமைகள், பலன்கள், கடமைகள், பணிகள் மற்றும் பொறுப்புகள் அனைத்தையும் அல்லது ஏதாவது ஒன்றை வழங்க, பத்திரமாக்க, விற்க, ஒதுக்க அல்லது மாற்றுவதற்கு நிறுவனத்துக்கு முழுமையான உரிமையும், முழு வலிமையும், அதிகாரமும் உண்டு, இது கடன் பெறுபவர்/பிணையாளருக்கு எவ்வித அறிவிப்பும் இல்லாமல் வேறு நபருக்கு அல்லது நிறுவனத்துக்கு விற்பது, மாற்றுவது, பத்திரமாக்கல், விதித்தல் அல்லது வேறு விதமாக தவணைகள் மற்றும் கடன் நிலுவையைப் பெறுவதற்கான உரிமையை உள்ளடக்கும் என்பதுடன் அத்தகைய விற்பனை, ஒதுக்கீடு

அல்லது மாற்றம் கடன் பெறுபவர்/பிணையாளரை உறுதியாகக் கட்டுப்படுத்துவதாக அமையும் என்பதுடன், அவ்வாறு ஒதுக்கப்பட்டவருக்கு, கடன் பெறுபவர் மற்றும் பிணையாளர், இந்தக் கடன் ஒப்பந்தத்தின் கீழ் தங்கள் கடமைகளை நிறைவேற்றவேண்டும். நிறுவனம் தீர்மானிக்கும் முறையிலும், விதிமுறைகளின் பேரிலும், தனது உரிமைகள் மற்றும் நலன்களை முழுமையாகவோ, பகுதியாகவோ விற்பதற்கு, ஒதுக்கிவதற்கு அல்லது மாற்றுவதற்கு முழுமையான வலிமையும், அதிகாரமும் பெற்றிருப்பதுடன், நிறுவனத்துக்கு முழுமையான உரிமை உண்டு என்பதை கடன் பெறுபவர் வெளிப்படையாக அங்கீகரித்து, ஏற்கிறார், இது வாங்கியவர், ஒதுக்கப்பட்டவர் அல்லது மாற்றம் செய்யப்பட்டவரின் சார்பாக நிறுவனத்தின் விருப்பப்படி எந்தவொரு மூன்றாம் தரப்புக்கும் கடன் பெறுபவருக்கு எழுத்துபூர்வ அறிவிப்பு வழங்காமல் அல்லது தெரிவிக்காமல் கடன் பெறுபவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் ஒரு உரிமையை இதன் கீழ் நிறுவனத்துக்கு தக்கவைத்துக் கொள்வதை உள்ளடக்கும்.

c. கடன் பெறுபவர் வழங்கிய, கடன் பெறுபவர் தொடர்பான மற்றும் தொடர்புடைய எந்தவொரு உண்மை அல்லது தகவலைச் சரிபார்ப்பதற்கும் மற்றும்/அல்லது கடன் பெறுபவரின் நிலுவை ஒன்று அல்லது மேற்பட்ட நபர்(களை), கடன் பெறுபவரின் பொறுப்பிலும், செலவிலும் நியமிப்பதற்கும், அத்தகைய நபர்(களுக்கு), பொருத்தமானது எனக் கருத்தும் அத்தகைய ஆவணங்கள், தகவல்கள், உண்மைகள் மற்றும் புள்ளி விவரங்களை நிறுவனம் வழங்கலாம் என்பதுடன் இதற்கான செலவுகளை கடன் பெறுபவர் ஏற்க வேண்டும் என்பதற்கு கடன் பெறுபவர் இதன்மூலம் நிறுவனத்துக்கு அதிகாரமளிக்கிறார்.

18. உரிமை மற்றும் சரி செய்தல்:

a. நிறுவனத்துடன் வைத்துள்ள எந்தவொரு கணக்கிலும் வரவில் உள்ள கடன் பெறுபவர்/பிணையாளருக்குச் சொந்தமான எல்லாத் தொகை மீதும் நிறுவனத்துக்கு உரிமை இருப்பதுடன், அதைச் சரி செய்வதற்கும் உரிமையைப் பெற்றிருக்கிறது. கடன் கணக்குக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையைச் செலுத்துமாறு நிறுவனம் கோரிய பிறகும் நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்குள் திரும்பச் செலுத்தப்படவில்லை என்றால், கடன் பெறுபவர்/பிணையாளரின் எந்தவொரு கணக்கிலும் வரவில் உள்ள தொகை, கடன் கணக்கின் கீழுள்ள நிலுவைக்காகச் சரி செய்யப்படும். பற்றாக்குறை ஏற்படும் நிகழ்வில், பற்றாக்குறை தொகையை கடன் பெறுபவர்/பிணையாளரிடமிருந்து நிறுவனம் வசூலிக்கும். இந்தக் கடன் மற்றும்/அல்லது பிற்பாடு மேற்கொள்ளப்பட்ட பிற ஒப்பந்தங்கள்/நிறுவனத்திடமிருந்து பெற்ற ஏதாவது நிதிவசதியின் கீழ் கடன்பெறுபவர்/பிணையாளருடன் தொடர்பிருப்பதாகக் கண்டறியப்பட்ட ஒன்றில் கடன்பெறுபவர்/பிணையாளர் கட்டணத்தைச் செலுத்தத் தவறுதல் தொடரும் வரை என்ஓசி /படிவம்-35. அசல் பட்டாக்கள்/ஆவணங்கள், நிலுவையின்மைக் கடிதம் மற்றும்/அல்லது கடன் பெறுபவர் பெற்றுக்கொண்ட வாகன மற்றும்/அல்லது பிற பிணையளிக்கப்பட்ட கடன்களின் கீழ் அடமானம் வைக்கப்பட்ட/ஈடு வைக்கப்பட்ட கடன் பெறுபவரின் சொத்துக்களுக்கு தொடர்புடைய சொத்தின் மீது உருவாக்கப்பட்ட அடமானத்தை நீக்குதலை நிறுத்தி வைப்பதற்கு/ ஒப்படைத்தலை நிறுத்தி வைப்பதற்கு நிறுவனத்துக்கு உரிமை உண்டு.அதன்படி, கடன் பெறுபவர்/பிணையாளர் ஆகியோர் என்ஓசி படிவம்-35, உரிமை பத்திரங்கள்/ஆவணங்கள், நிலுவைத் தொகை இல்லை என்ற கடிதம் மற்றும் மேற்கூறிய அடமானத்தை நீக்குவதற்கான கோரிக்கை ஆகியவற்றை, கடன் பெறுபவர்/பிணையதார மேற்கொண்ட அனைத்து ஒப்பந்தங்களிலும் உள்ள அனைத்து நிலுவைத் தொகைகள்/கட்டணங்களை முழுமையாகவும் இறுதியாகவும் செலுத்திய பிறகே பெறுவதற்கு உரிமை உண்டு என்று இதன்மூலம் ஒப்புக்கொண்டு, ஏற்கிறார்கள்.

b. கடன் பெறுபவர்/பிணையாளரால் எவ்வித சரி செய்தல் அல்லது எதிர் உரிமைக்கோரல் இருக்கக்கூடாது என்பதுடன், இந்த கடன் ஒப்பந்தத்தின் கீழ் கடன் பெறுபவர்/பிணையாளரால் செலுத்தப்படும் அனைத்துக் கட்டணங்களும் சரி செய்தல் அல்லது உத்தரவாதம் அல்லது அவற்றில் எதுவும் இல்லாமல் அல்லது எந்த சட்டத்தின் கீழும் செலுத்தப்பட வேண்டும்.

19.இழப்பீடு:

கடன் பெறுபவர்/பிணையாளர் கீழே நிறுவனத்துக்குத் தந்த ஏதாவது பொய்யான அல்லது தவறாக வழிநடத்தும் தகவல்கள் அல்லது கீழேயுள்ள ஏதாவது விதிமுறைகள், நிபந்தனைகள், ஒப்பந்தங்கள் மற்றும் விதிகளை கடன் பெறுபவர்/பிணையாளர் ஏதாவது மீறல்/தவறுதல்/மீறுகை/கடைப்பிடிக்காமை/நிறைவேற்றாமை ஆகியவை காரணமாக நிறுவனத்திற்கு எதிராக எழக்கூடிய அனைத்து நடவடிக்கைகள், வழக்குகள், சட்ட நடவடிக்கைகள் மற்றும் நிறுவனம் ஏற்க நேரிடக்கூடிய அல்லது அனுபவிக்க நேரிடக்கூடிய அனைத்து செலவுகள், கட்டணங்கள், காப்பீட்டு பிரீமியம் செலவுகள், இழப்புகள் அல்லது சேதங்களுக்கு கடன் பெறுபவர்/பிணையாளர் இழப்பீடு வழங்க வேண்டும் மற்றும் நிறுவனத்திற்கு இழப்பீடு வழங்கி பாதுகாக்க வேண்டும். இந்தக் கடன் ஒப்பந்தத்தின் பொருளாக இருக்கும் குறிப்பிட்ட நிலுவைத் தொகையில், இந்த உட்பிரிவின் கீழ் கடன் பெறுபவர் செலுத்த வேண்டிய எந்தவொரு தொகையையும் சேர்க்கும் உரிமை நிறுவனத்திற்கு உண்டு.

20.அறிவிப்பு:

இதன்படி, ஏதேனும் அறிவிப்பு, தபால்/கூரியர்/தந்தி/தொலைநகல் பரிமாற்றம்/இந்தக் கடன் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கடன் பெறுபவர்/பிணையாளரின் முகவரி/களுக்கு அனுப்பப்பட்ட மின்னஞ்சல் அல்லது கடன் பெறுபவர்/பிணையாளரை முறையாகக் குறிப்பிட்டு அனுப்பும் அதுபோன்ற வேறு மின்னணு முறையில் அனுப்பப்பட்டால் முறையாகத் தரப்பட்டு, வழங்கப்பட்டதாகக் கருதப்படும் என்பதோடு, மின்னஞ்சல்/பிற மின்னணு முறைகள் தவிர பிற வழிகளில் அனுப்பப்பட்ட அறிவிப்புகள் அனுப்பப்பட்ட தேதியைத் தொடர்ந்து வரும் இரண்டாவது வேலை நாள் அல்லது உண்மையில் பெறப்பட்ட தேதி ஆகியவற்றில் எது முன் வருகிறதோ அந்தத் தேதியில் செயலுக்கு வந்ததாகக் கருதப்படும். ஒருவேளை அந்த அறிவிப்பு மின்னஞ்சல் அல்லது வேறு ஏதாவது மின்னணு முறையில் அனுப்பப்பட்டால், அந்த அறிவிப்பைப் படிக்கும் ரசீது வழங்கப்படும்போது அல்லது படிக்கும் ரசீதை நிறுவனம் வேண்டாதபோது, செலுத்தும் நேரத்திலும் அந்த அறிவிப்பு வழங்கப்பட்டதாகக் கருதப்படும்.

21. செலவுகள் மற்றும் செலவினங்கள்:

a. இந்தக் கடன் ஒப்பந்தம் தொடர்பான செலவுகள் (வழக்கறிஞர் கட்டணம் உள்பட), கட்டணங்கள், செலவினங்கள், வரிகள், கட்டணங்கள் (முத்திரைத்தாள் கட்டணம் உள்பட) அனைத்தும் கடன் பெறுபவர் மற்றும் பிணையாளரால் ஏற்கப்பட்டு, செலுத்தப்படும். சட்டபூர்வ நடவடிக்கைகள் மற்றும் வசூலிப்பதற்காக நியமிக்கப்படும் பிரதிநிதிகளின் கூடுதல் செலவுகள் உள்பட, நிறுவனத்துக்கு வரவேண்டிய தவணைகள் அல்லது வேறு ஏதாவது தொகைகளை வசூலிப்பதில் அல்லது அதற்கு எடுக்கப்படும் முயற்சிக்கான எந்தவொரு செலவையும் நிறுவனத்துக்கு செலுத்த வேண்டிய கடமை கடன் பெறுபவர் மற்றும் பிணையாளருக்கு உண்டு.

b. செலுத்தப்பட்ட அனைத்துக் கட்டணங்கள் அல்லது நிறுவனத்துக்கு ஏற்பட்ட செலவுகளை, நிறுவனத்திடமிருந்து கோரிக்கை அறிவிப்பு வந்த தேதியிலிருந்து 3 நாட்களுக்கு கடன் பெறுபவர்/பிணையாளர் ஈடு செய்யவேண்டும். அந்தத் தொகைகளுக்கு, கட்டணத் தேதியிலிருந்து, ஈடு செய்யப்படும் தேதி வரை அபராதக் கட்டணங்கள் விதிக்கப்படும்.

22. தள்ளுபடி:

இந்தக் கடன் ஒப்பந்தம் அல்லது வேறு ஏதாவது ஒப்பந்தம் அல்லது ஆவணத்தின் கீழ் நிறுவனத்துக்குக் கிடைக்கும் ஏதாவது உரிமை, அதிகாரம் அல்லது தீர்வைப் பயன்படுத்துவதில் தாமதம் அல்லது ஏதாவது உரிமையை பயன்படுத்தத் தவிர்ப்பது அல்லது நிறுவனத்தால் வழங்கப்படும் ஏதாவது சலுகை, அத்தகைய உரிமை, அதிகாரம் அல்லது தீர்வைப் பாதிக்காது என்பதுடன், எந்தவொரு செலுத்தத் தவறுதலிலும் அதை விட்டுக்கொடுப்பதாகவோ, ஒப்புக்கொள்வதாகவோ கருதக்கூடாது என்பதுடன், ஏதாவது செலுத்தத் தவறுதலில் நிறுவனத்தின் செயல்பாடு அல்லது செயல்படாமை அல்லது ஏதாவது செலுத்தத் தவறுதலிலும் அது

ஒப்புக்கொள்வது, வேறொரு செலுத்தத் தவறுதல் தொடர்பாக நிறுவனத்தின் ஏதாவது உரிமை, அதிகாரம் அல்லது தீர்வைப் பாதிக்காது அல்லது ஊறுவிளைவிக்காது.

23. செயலாக்கத்தன்மை:

இந்தக் கடன் ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள ஒன்று அல்லது மேற்பட்ட சட்டங்கள் செல்லத்தகாததாக அல்லது செயலாக்கமுடியாததாக இருந்தாலும், அதைக் கருத்தில் கொள்ளாமல், இந்தக் கடன் ஒப்பந்தத்தின் மீதிப்பகுதி சட்டத்தால் அனுமதிக்கப்படும் அளவுக்கு செயல்படுத்த முடிவதாக இருப்பதுடன், செல்லத்தகாததாக அல்லது செயல்படுத்த முடியாத அதுபோன்ற ஏதாவது உரிமை அல்லது சட்டத்தில் கூறப்பட்டுள்ள அந்தத் தரப்பினரின் நோக்கம் செயலுக்கு வரும்.

24. கடன் தகவல்கள்:

(a) கடன் பெறுபவர்/பிணையாளர், நிறுவனம் பின்வரும் அனைத்தையும் அல்லது அதுபோன்ற ஒன்றை வெளிப்படுத்த இதன் மூலம் ஒப்புக்கொண்டு, ஒப்புதலளிக்கிறார்; i. கடன் பெறுபவர்/பிணையாளர் தொடர்பான தகவல்கள் மற்றும் தரவு; ii. கடன் பெறுபவர்/பிணையாளர் பெற்ற/ பெறவுள்ள ஏதாவது கடன் வசதி குறித்த தகவல்கள் அல்லது தரவு; iii தனது கடமையை நிறைவேற்றுவதில் கடன் பெறுபவர்/பிணையாளர் தவறுதல், ஏதும் இருப்பின், இது தொடர்பாக ஆர்பிஐ-ஆல் அல்லது பொருந்தும் வேறு ஏதாவது சட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட கடன் தகவல் நிறுவனம்/கள் மற்றும்/அல்லது முகமை/களுக்கு வெளிப்படுத்துவது பொருத்தமானது மற்றும் தேவையானது என்று நிறுவனம் கருதுமாறு;

(b) அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட கடன் தகவல் நிறுவனம்/கள் மற்றும்/அல்லது முகமை/கள் பின்வருவனவற்றைச் செய்யலாம் என்பதற்கு கடன் பெறுபவர்/பிணையாளர் உறுதியளிக்கிறார்

i அவர்கள் பொருத்தமானது எனக் கருதும் விதமாக, அந்தத் தகவல் மற்றும் நிறுவனத்தால் வெளிப்படுத்தப்பட்ட தரவை பயன்படுத்தும், செயலாக்கம் செய்வதற்கு; மற்றும் ii. இந்திய ரிசர்வ் வங்கியால் பரிந்துரைக்கப்படக்கூடிய, வங்கிகள்/நிதி நிறுவனங்கள் மற்றும் பிற கடன் வழங்குநர்கள் அல்லது பதிவு செய்யப்பட்ட பயனர்களுக்கு, அவர்களால் தயாரிக்கப்பட்ட, செயலாக்கம் செய்யப்பட்ட தகவல்கள் மற்றும் தரவு அல்லது அதன் தயாரிப்புகளை பரிசீலனைக்காக வழங்க. மேலும், கடன் பெறுபவர்/பிணையாளர், கடன் பெறுபவர் /பிணையாளரின் அனைத்து அல்லது ஏதேனும் தகவல்களை குழு நிறுவனங்கள், துணை நிறுவனங்கள் அல்லது நிறுவனம் பொருத்தமானதாகக் கருதும் வேறு எந்த நபருக்கும் நிறுவனம் வெளிப்படுத்த ஒப்புக்கொண்டு, ஒப்புதல் அளிக்கிறார்.

25. பிற தகவல்கள்:

a. விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் எதையாவதை வருங்காலத்தில் மாற்றம் (வட்டி விகிதம், அபராதக் கட்டணங்கள், முன்கூட்டியே முடித்தலுக்குப் பொருந்தும் விகிதங்கள் மற்றும் இந்தக் கடன் ஒப்பந்தத்தின் கீழ் விதிக்கப்படும் வேறு ஏதாவது கட்டணங்கள்) செய்வதற்கான உரிமையை பெற்றுள்ளதுடன், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் ஏதாவது மாற்றம் குறித்து, கடன் பெறுபவருக்கு, அது பொருத்தமானது எனக் கருதும் முறையில் அறிவிக்கலாம்.

b. கடன் பெறுபவர்/பிணையாளரின் முகவரியில் ஏற்படும் ஏதாவது மாற்றங்கள் அத்தகைய மாற்றம் ஏற்பட்டதிலிருந்து 4 நாட்களுக்குள் நிறுவனத்துக்கு எழுத்துபூர்வமாகத் தெரிவிக்க வேண்டும்.

c. இந்த ஒப்பந்தம் இந்தியச் சட்டங்களுக்கு ஏற்ப நிர்வகிக்கப்படுவதுடன், அதன்படி புரிந்து கொள்ளப்படும்.

d. இரண்டு அல்லது மேற்பட்ட கடன் பெறுபவர்கள் இருந்தால், இந்தக் கடன் ஒப்பந்தத்தின்கீழ் அவர்களது பொறுப்புகள் இணைந்தும், பலவாகவும் இருக்கும்.

e. அனைத்து தகவல் தொடர்புகளிலும் கடன் பெறுபவர்/பிணையாளர், கடன் ஒப்பந்த எண்ணைக் குறிப்பிட வேண்டும்.

f. இந்தக் கடன் ஒப்பந்தத்தில், அதன் சூழ்நிலை அல்லது அதன் பொருள் வேறுவிதமாகத் தேவைப்படாதவரை:

i. ஒருமையில் தரப்பட்டிருப்பவை பன்மையை உள்ளடக்கும், பன்மையில் தரப்பட்டவை ஒருமையை உள்ளடக்கும்.

ii. ஒரு நபரைக் குறிப்பிடும் சொற்கள் ஒரு தனி நபர், கார்ப்பரேஷன், நிறுவனம், கூட்டு நிறுவனம், அறக்கட்டளை அல்லது வேறு ஏதாவது நிறுவனம் ஆகியவற்றை உள்ளடக்கும்.

iii. தலைப்புகள் மேற்கோளுக்காக மட்டுமே.

g. நிறுவனம், கடனோடு சேர்த்து, தனது பிற கடன்கள் மற்றும் சேவைகளையும் (காப்பீடு போன்றவை), தனது துணை நிறுவனங்களின் கடன்கள் மற்றும் சேவைகளையும் இடையில் விற்பனை செய்யலாம் என்பதை கடன் பெறுபவர் இதன்மூலம் ஒப்புக் கொண்டு, உறுதிப்படுத்துகிறார்.

h. நிகழ்வுக்கு ஏற்ப, கடன் பெறுபவர்/பிணையாளர் ஒருவேளை கூட்டு நிறுவனம்/ நிறுவனம்/எச்யுஎஃப் என்று இருந்தால், இந்தக் கடன் ஒப்பந்தம் தொடரும் காலத்தில் அவர்களது அமைப்பில் ஏற்படும் மாற்றம் எதுவும் கடன் பெறுபவர்/பிணையாளரின் பொறுப்பைப் பாதிக்காது அல்லது விடுவிக்காது.

26. மத்தியஸ்தம்:

(a) இந்த ஒப்பந்தம் செயலில் இருக்கும்போது அல்லது அதன் பிறகு இந்த ஒப்பந்தம் காரணமாக உண்டாகும் சர்ச்சைகள், வேறுபாடுகள் மற்றும்/அல்லது கோரிக்கைகள் மத்தியஸ்தம் மற்றும் சமரச சட்டம் 1996 (சட்டம்) அல்லது தகராறை மத்தியஸ்தத்துக்கு எடுத்துச் செல்லும் முன் அறிவிக்கப்பட்ட அதன் ஏதாவது சட்டபூர்வ திருத்தங்களின்படி தீர்த்துவைக்கப்படும் என்பதுடன், அத்தகைய சர்ச்சைகள், வேறுபாடுகள் மற்றும்/அல்லது கோரிக்கைகளைத் தீர்ப்பதற்கு மத்தியஸ்தர் ஒருவரை நியமிக்க வேண்டி அத்தகைய சர்ச்சையைத் தொடங்கியவரால் பின்வரும் ஏதாவது நடுநிலை மத்தியஸ்த நிறுவனங்களுக்கு (இனிமேல் “மத்தியஸ்த நிறுவனம்” எனக் குறிப்பிடப்படும்) பரிந்துரைக்கப்படும்.

i ப்ரிசால்வ்360, ஒரு ஆன்லைன் சர்ச்சை தீர்வு தளம்/ நிறுவனம், அதைத் தற்போது நடத்துபவர் எட்ஜ்கிராஃப்ட் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட், அதன் தற்போதைய அலுவலகம் அமைந்துள்ள முகவரி 3வது தளம், சர்ச்கேட் ஹவுஸ், 32, வீர் நாரிமன் ரோடு, ஃபோர்ட், மும்பை- 400 023 (மற்றும் அதற்குப் பிறகு ஏற்படும் ஏதாவது மாற்றங்கள்). (அல்லது) ii. அட்ரெஸ் நவ், ஒரு ஆன்லைன் சர்ச்சை தீர்வு தளம்/ நிறுவனம், அதைத் தற்போது நடத்துபவர் ஏடிஆர் இ-சர்வந்த்ரா பிரைவேட் லிமிடெட், அதன் தற்போதைய அலுவலகம் அமைந்துள்ள முகவரி 63, பேலஸ் ரோடு, வசந்தா நகர், பெங்களூர்- 560 052 (மற்றும் அதற்குப் பிறகு ஏற்படும் ஏதாவது மாற்றங்கள்). (அல்லது) iii. இந்திய மற்றும் சர்வதேச மத்தியஸ்த மன்றம், ஒரு அறக்கட்டளையான அதன் தற்போதைய அலுவலகம் அமைந்துள்ள முகவரி, எண் 6, எம்.டி.எச். ரோடு, டிஏபிசி காம்ப்ளக்ஸ் 3வது தளம், வில்லிவாக்கம், சென்னை- 600 049. (மற்றும் அதற்குப் பிறகு ஏற்படும் ஏதாவது மாற்றங்கள்).

மத்தியஸ்த நிறுவனம் சர்ச்சைகள்/வேறுபாடுகள் மற்றும்/அல்லது கோரிக்கைகளை ஒரு மத்தியஸ்தருக்குப் பரிந்துக்கும். மத்தியஸ்த நிறுவனம் மத்தியஸ்தரை நியமிப்பது, இந்த ஒப்பந்தத்துக்கான அனைத்து தரப்பினரின் பரஸ்பர ஒப்புதலுடன் இணைந்து நியமிக்கப்பட்டதாகவே கருதப்படும். அத்தகைய மத்தியஸ்தரால் வழங்கப்படும் தீர்ப்பே இறுதியானதாகவும், இந்த ஒப்பந்தத்துக்கான அனைத்து தரப்பினரையும் கட்டுப்படுத்துவதாக இருக்கும்.

(b) பின்வரும் நிகழ்வுகளில், நியமிக்கப்பட்ட மத்தியஸ்தரின் இடத்தில் பதிலி மத்தியஸ்தர் ஒருவரை மத்தியஸ்த அமைப்பு நியமிக்கும்:

i. நியமிக்கப்பட்ட மத்தியஸ்தரின் மரணம்; அல்லது

ii. எந்தவொரு காரணத்துக்காகவும், நியமிக்கப்பட்ட மத்தியஸ்தர், மத்தியஸ்தராகச் செயல்பட இயலாத அல்லது விரும்பாதபோது.

(c) மத்தியஸ்த செயல்முறைகளுக்கான இடம் சென்னை அல்லது கொல்கத்தாவாக இருக்கும். சென்னை அல்லது கொல்கத்தாவில் உள்ள நீதிமன்றங்கள், இந்த ஒப்பந்தத்தால் அல்லது ஒப்பந்தத்தின் கீழ் ஏற்படும் சர்ச்சைகள் மற்றும் வேறுபாடுகள் மற்றும்/அல்லது கோரிக்கைகளை விசாரித்து, தீர்த்துவைக்கும் பிரத்யேக அதிகார வரம்பைக் கொண்டிருக்கும். மத்தியஸ்த செயல்முறைகளுக்கான மொழி ஆங்கிலமாக இருக்கும்.

(d) தேவைப்பட்டால், மத்தியஸ்த செயல்முறைகளை நடத்த உதவுவதற்கு மத்தியஸ்தருக்கு நிர்வாக உதவியை மத்தியஸ்த நிறுவனம் வழங்கலாம்.

(e) எழுத்துபூர்வ கோரிக்கைகள்/சமர்ப்பிப்புகள், ஆவணங்களை, அவரது முடிவே இறுதியானதாகவும், தரப்பினர்களைக் கட்டுப்படுத்துவதாகவும் இருக்கக்கூடிய மத்தியஸ்தரால் தீர்மானிக்கப்படுமாறு நேரடியாக மற்றும்/அல்லது வேறு ஏதாவது மின்னணு/மெய் நிகர் முறை (தபால், மின்னஞ்சல் மற்றும்/அல்லது தேவைப்பட்டால் வெளிப்புறச் செயலி அல்லது தளம் ஒன்றைப் பயன்படுத்தி காணொளிக் கூட்டம் (விசி) ஆன்லைன், மெய் நிகர் விசாரணை மற்றும் பிற உள்பட வேறு முறையிலான மின்னணு தகவல் தொடர்பின் மூலம்) அல்லது அவை இணைந்தோ சமர்ப்பிப்பதன் மூலம் மத்தியஸ்த நடைமுறைகள் நடத்தப்படுவதற்கு இதன் மூலம் தரப்பினர்கள் ஒப்புதலளிக்கிறார்கள்.

(f) மத்தியஸ்தர் தன்னால் வழங்கப்பட்ட தீர்ப்பு/இடைக்காலத் தீர்ப்பு/ஆணையின் நகல் ஒன்றை அவரே முறையாகச் சான்றளித்து தபால்/கூரியர் மூலம் அல்லது அந்தத் தீர்ப்பின் ஸ்கேன் செய்யப்பட்ட படம் அல்லது மின்னணு/டிஜிட்டல் முறையில் கையெழுத்திடப்பட்ட தீர்ப்பை தொடர்புடைய தரப்பினருக்கு, பொருத்தமானது என அவர் கருதுமாறு சுயமாகவோ அல்லது மத்தியஸ்த நிறுவனத்தின் மூலமோ அனுப்ப வேண்டும், அது இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக கையெழுத்திடப்பட்ட பிரதியாகக் கருதப்படும்.

(g) கடன் பெறுபவர்(கள்)/பிணையாளர்(கள்) இந்த ஒப்பந்தத்தின் கீழ் அல்லது கடன் பெறுபவர்/பிணையாளர் செயல்படுத்திய/பகிர்ந்துகொண்ட வேறு ஏதாவது ஆவணத்தின் கீழ் நிறுவனத்துக்கு வழங்கிய தபால்/மின்னஞ்சல் மற்றும்/அல்லது வேறு ஏதாவது மின்னணு முறையிலான முகவரி, செயலில் உள்ள தபால்/மின்னஞ்சல் மற்றும்/அல்லது வேறு ஏதாவது மின்னணு முறையிலான முகவரியாகக் கருதப்படுவதோடு, அந்த தபால்/மின்னஞ்சல் மற்றும்/அல்லது வேறு ஏதாவது மின்னணு முறையிலான முகவரிக்கு வழங்கப்பட்ட எந்தவொரு சேவையும் நிறைவடைந்ததாகக் கருதப்படும்.. மேலே வழங்கப்பட்ட தபால்/மின்னஞ்சல் மற்றும்/அல்லது வேறு ஏதாவது மின்னணு முறையிலான முகவரியில் ஏதாவது மாற்றம் அல்லது பிற தவறுகள் இருப்பின் அது உடனடியாக நிறுவனத்துக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.

27. குறை தீர் அமைப்பு:

நடைமுறையிலுள்ள ஆர்பிஐ வழிகாட்டுதல்களின்படி விரிவான குறை தீர் அமைப்பை நிறுவனம் ஏற்படுத்தியுள்ளது. குறை தீர் அமைப்பு மற்றும் தொடர்பு விவரங்கள் https://cholamandalam.com/grievance- redressal.aspx என்ற முகவரியில் கிடைக்கும். கடன் பெறுபவர், அந்தக் குறை தீர் அமைப்பின் கீழ் தனது/தங்களது குறை/களை தீர்த்துக்கொள்ளலாம்.

28. மின்னணு/டிஜிட்டல் செயலாக்கம் மற்றும் தகவல் தொடர்புகள்:

கடன் ஒப்பந்தம் மற்றும் மின்னணு/டிஜிட்டல் வடிவில் (பொருந்தும் இடங்களில்) உள்ள தொடர்புடைய ஆவணங்களை, டிஜிட்டல்/மின்னணு கையெழுத்திடுவதன் மூலம் அல்லது ஒரு முறை கடவுச்சொல் (ஒடிபி)

மூலம் மற்றும்/அல்லது அவர்களது அறிவிக்கப்பட்ட கைபேசி எண்ணுக்கு அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும் மின்னணு-இணைப்பு மூலம் மற்றும்/அல்லது 'நான் ஒப்புக் கொள்கிறேன்/ஏற்கிறேன்' பொத்தானை க்ளிக் செய்வதன் மூலம் அல்லது வேறு ஏதாவது முறையில் செயலாக்க முடியும் என்பதை கடன் பெறுபவர் மற்றும் பிணையாளர் இதன் மூலம் ஒப்புக்கொண்டு, புரிந்து கொண்டு, ஏற்றுக் கொண்டு, உறுதிப்படுத்துகிறார்கள்.

இந்தக் கடன் ஒப்பந்தம், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், அறிவுறுத்தல்கள், ஏற்புகள் மற்றும் தகவல்தொடர்புகள் ('தகவல்தொடர்புகள்') ஆகியவற்றை மின்னஞ்சல், தொலைநகல் பரிமாற்றம், குறுஞ்செய்தி அனுப்புதல், ஆன்லைன்/இணையதள ஏற்பு மற்றும் பிற ('மின்னணு ஊடகம்') போன்ற மின்னணு முறைகளில் அனுப்புவது, மோசடியான மாற்றம் செய்யப்படுதல் மற்றும் தவறான அனுப்புதல்கள் மற்றும் அந்தரங்கம், தரவுப் பாதுகாப்பு மற்றும் இரகசியத்தன்மை இல்லாமை போன்ற பல இடர்களை உள்ளடக்கும் என்பதை கடன் பெறுபவர் மற்றும் பிணையாளர் ஆகியோர் அறிந்துள்ளனர்.

.

இருப்பினும், இந்தக் கடன் மற்றும் அதன் இயக்கம் தொடர்பாக இந்தக் கடன் ஒப்பந்தத்தின் கீழ் பல்வேறு விவகாரங்களுக்கு மின்னணு ஊடகம் மூலம் நிறுவனத்திடமிருந்து தகவல்களைப் பெறவும், நிறுவனத்துக்கு தகவல்களை அனுப்பவும் கடன் பெறுபவர்/பிணையாளர் விரும்புகிறார்கள்.

அதை நிறுவனம் அனுமதிப்பதைக் கருத்தில் கொண்டு, கடன் பெறுபவர்/பிணையாளர் நிறுவனத்துக்குப் பின்வருமாறு திரும்பப் பெற இயலாதவாறு உறுதி செய்து, உறுதியளிக்கிறார்:

1. நிறுவனம் தனது தேவைகளுக்காக மின்னணு ஊடகம் மூலமாக வழங்கப்பட்ட தகவல் தொடர்புகளை நம்பியிருக்கும் (அவை உண்மையானவை என்று நம்புவதற்கு) உரிமை நிறுவனத்துக்கு உண்டு. வழங்கப்பட்ட அல்லது பெறப்பட்ட தகவல் தொடர்புகள் எவை என்ற கேள்வி எழும்பட்சத்தில், நிறுவனம் பெற்ற மின்னணு ஊடகத்தின் பதிவுகளே இறுதியாகவும், முடிவானதாகவும் மற்றும் கட்டுப்படுத்துவதாகவும் கருதப்படுவதுடன், இது தொடர்பாக எவ்விதமான சரிபார்ப்பையும் மேற்கொள்ளும் பொறுப்பு நிறுவனத்துக்கு இல்லை.

2. இவ்வாறு கூறப்பட்ட தகவல்தொடர்புகளில் முழுமையாக அல்லது பகுதியளவாக உள்ளவாறு நடந்து கொள்ள வேண்டிய கட்டுப்பாடு நிறுவனத்துக்கு இல்லை என்றும், அதற்கான முழுப்பொறுப்பும் கடன் பெறுபவர்/பிணையாளருக்கே உண்டு என்று கடன் பெறுபவர்/பிணையாளர் உறுதிப்படுத்துகிறார்கள்.

3. மின்னணு ஊடகம் மூலம் பெறப்பட்ட தகவல்தொடர்புகளின் அடிப்படையிலான ஏதாவது செயல் அல்லது செயல்பட மறுத்தல் அல்லது தவறுதல் அல்லது செயல்படுவதைத் தள்ளிப்போடுவதன் காரணமாக எழும் விளைவுகளுக்கு நிறுவனம் பொறுப்பாகாது.

4. இந்தச் உட்பிரிவில் உள்ள உறுதிமொழிகளின் காரணமாகவும், அவற்றை நம்பியும் மட்டுமே மின்னணு ஊடகம் மூலம் வழங்கப்பட்ட ஏதாவது தகவல்தொடர்புகளின் அடிப்படையில் செயல்படுவதற்கு நிறுவனம் ஒப்புக் கொள்கிறது என்பதை கடன் பெறுபவர் மற்றும் பிணையாளர் அறிந்து, உறுதிப்படுத்துகிறார்கள்.

29. ஏற்பு:

கடன் பெறுபவர் மற்றும் பிணையாளர் இதன் மூலம் பின்வருமாறு உறுதியளிக்கிறார்: அவர்களது முன்னிலையில் நிரப்பப்பட்ட, அட்டவணை/களில் தரப்பட்டுள்ள பொருள் விவரங்கள் உள்பட, கடன் ஒப்பந்தம் முழுவதையும் படித்துவிட்டார்கள், அனைத்து உட்பிரிவுகள்/விவரங்களின் முழுமையான பொருளைப் புரிந்து கொண்டார்கள், அவற்றால் கட்டுப்படுத்தப்பட ஒப்புக் கொள்கிறார்கள். அவர்கள் மேலே கூறப்பட்ட வசதியைப் பெறுவதற்குத் தேவையான ஆவணங்களை செயலாக்கம் செய்துவிட்டார்கள்.

நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட கையெழுத்திடுபவர் இந்தக் கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் தேதியில் இந்தக் கடன் ஒப்பந்தம் முடிவு செய்யப்பட்டு, சட்டபூர்வமாகக் கட்டுப்படுத்தும் தன்மையைப் பெறும் என்று அவர்கள் ஒப்புக் கொள்கிறார்கள்.

இங்குள்ள தரப்பினர், அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நாள், மாதம் மற்றும் வருடத்தில் இந்தக் கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்

கீழே பெயரிடப்பட்டவரால்

கையெழுத்திட்டு வழங்கப்பட்டது

சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி

அங்கீகரிக்கப்பட்ட கையெழுத்திடுபவர்

கீழே பெயரிடப்பட்டவரால்

கையெழுத்திட்டு வழங்கப்பட்டது

இணை-கடன் பெறுபவர் 1 பெயர் & கையெழுத்து

கீழே பெயரிடப்பட்டவரால்

கையெழுத்திட்டு வழங்கப்பட்டது

இணை-கடன் பெறுபவர் 3 பெயர் & கையெழுத்து

கீழே பெயரிடப்பட்டவரால்
கையெழுத்திட்டு வழங்கப்பட்டது

இணை-கடன் பெறுபவர் 5 பெயர் & கையெழுத்து

கீழே பெயரிடப்பட்டவரால் கையெழுத்திட்டு வழங்கப்பட்டது

கடன் பெறுபவர் பெயர் & கையெழுத்து

கீழே பெயரிடப்பட்டவரால்

கையெழுத்திட்டு வழங்கப்பட்டது

இணை-கடன் பெறுபவர் 2 பெயர் & கையெழுத்து

கீழே பெயரிடப்பட்டவரால்

கையெழுத்திட்டு வழங்கப்பட்டது

இணை-கடன் பெறுபவர் 4 பெயர் & கையெழுத்து

கீழே பெயரிடப்பட்டவரால்

கையெழுத்திட்டு வழங்கப்பட்டது

பிணையாளர்(கள்) பெயர் & கையெழுத்து

அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| கடன் ஒப்பந்த தேதி: | | | |
| கடன் விண்ணப்ப எண்: | | | |
| வரிசை எண் | கடன் பெறுபவர்/பிணையாளர் வகை | பெயர் | முகவரி |

| | | | |
|---|---|---|---|
| 1 | கடன் பெறுபவர் | | |
| 2 | இணை-கடன் பெறுபவர் 1 | | |
| 3 | இணை-கடன் பெறுபவர் 2 | | |
| 4 | இணை-கடன் பெறுபவர் 3 | | |
| 5 | இணை-கடன் பெறுபவர் 4 | | |
| 6 | இணை-கடன் பெறுபவர் 5 | | |
| 7 | பிணையாளர் | | |

| வரிசை எண் | கடன் பெறுபவர்/பிணையாளர் வகை | மின்னஞ்சல் முகவரி | கைப்பேசி எண்: | தொழில்/வணிகத்தின் இடம் | நிலை (தனிநபர்/ தனி உரிமையாளர்/ நிறுவனம்/கூட்டு நிறுவனம்) |
|---|---|---|---|---|---|
| 1 | கடன் பெறுபவர் | | | | |
| 2 | இணை-கடன் பெறுபவர் 1 | | | | |
| 3 | இணை-கடன் பெறுபவர் 2 | | | | |
| 4 | இணை-கடன் பெறுபவர் 3 | | | | |
| 5 | இணை-கடன் பெறுபவர் 4 | | | | |
| 6 | இணை-கடன் பெறுபவர் 5 | | | | |
| 7 | பிணையாளர் | | | | |

| | |
|---|---|
| கடனின் நோக்கம்: | |
| கடன் வகை | |
| கடன் தொகை | |
| கடனின் காலம் | |
| வட்டி வகைகள் | Fixed<br>மாறாதது |
| வட்டி விகிதம் | % Per Annum<br>% ஒரு வருடத்துக்கு |
| திருப்பிச் செலுத்தல் அட்டவணை*<br>a) ஒவ்வொரு தவணைக்குமான தொகை | |
| (b) தவணைகளின் எண்ணிக்கை | |
| (c) முதல் தவணை _____ அன்றோ அதற்கு முன்போ செலுத்தப்பட வேண்டும் மற்றும் அடுத்தடுத்து வரும் தவணைகள் அடுத்தடுத்த ஒவ்வொரு மாதமும் 5ம் தேதியன்று அல்லது அதற்கு முன் செலுத்தப்பட வேண்டும்; | வரவேற்புக் கடிதம் அல்லது நிறுவனத்தால் தீர்மானிக்கப்படுமாறு அதுபோன்ற வேறு முறையில் தெரிவிக்கப்படும் |
| திருப்பிச் செலுத்தல் கால இடைவெளி | மாதாந்திர தவணைகளாக |

| | |
|---|---|
| அபராதக் கட்டணங்கள் | செலுத்தத் தவறிய தொகைகளின் தவணைத் தேதியிலிருந்து செலுத்தும் தேதி வரை வருடத்துக்கு 30%. |
| ஆவணம்/நகல் ஆவணக் கட்டணங்கள்:<br>i காகித வடிவ கடன் அறிக்கைக் கட்டணங்கள்<br>ii. என்ஓசி நகல்<br>iii. காகித வடிவ திருப்பிச் செலுத்தல் அட்டவணை | Rs.250/-<br>Rs.1000/-<br>Rs.500/- |
| காசோலை/ மேண்டேட் ஸ்வாப்) கட்டணங்கள் | Rs.500/- |
| திரட்டல் கட்டணம் – நிர்வாக & செயல்முறை கட்டணம் (பி.எ.ஃப்) | எஸ்.எ.ஃப் — கடன் தொகையில் - |
| காசோலை/ மேண்டேட் திரும்புதல் கட்டணங்கள் | Rs.1000/- |
| ஆணை நிராகரிப்புக் கட்டணங்கள் | Rs.500/- |
| சட்டக் கட்டணங்கள் | உள்ளது உள்ளபடி + ஜிஎஸ்டி |
| முன்கூட்டிய கடன் முடிப்பு நிபந்தனைகள் (முழுமையான முடிப்பு) | உரிய தேதிகளில் ஆறு தவணைகளை செலுத்தும் வரை முன் மூடல் அனுமதிக்கப்படாது |
| மூடுவதற்கு முந்தைய நிபந்தனைகள் (முழு மூடல்) | 7வது தவணை முதல் 12வது தவணை வரையிலான ப்ரீக்லோசருக்கான நிலுவையில் உள்ள அசல் தொகையில் 6% + ஜிஎஸ்டி விதிக்கப்படும்<br><br>12வது தவணையை உரிய தேதியில் செலுத்திய பிறகு ப்ரீக்லோசர் செய்தால் நிலுவையில் உள்ள அசல் தொகையில் 4% + ஜிஎஸ்டி விதிக்கப்படும் |
| சட்டபூர்வ மற்றும் ஒழுங்குமுறை கட்டணம் – முத்திரைக் கட்டணம் | |

குறிப்பு: 1. மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள் அவ்வப்போது பொருந்தும், பொருத்தமான வரிகள், தீர்வைகள், விதிப்புகள், கூடுதல் கட்டணங்கள் மற்றும் செஸ் ஆகியவற்றை உள்ளடக்காது.

2. முக்கிய உண்மை அறிக்கை மற்றும் அதன் இணைப்புகள், இந்த அட்டவணைக்கு இணைப்பாக வழங்கப்பட்டுள்ளன.

ஆர்பிஐ வழிகாட்டல்களின்கீழ் கடன்களை எஸ்எம்ஏ மற்றும் என்பிஏ பிரிவுகளின் கீழ் வகைப்படுத்தலுக்கான அடிப்படைகள் பின்வருமாறு:

| வகைப்படுத்தல் பிரிவுகள் | வகைப்படுத்தலுக்கான அடிப்படை – அசல் அல்லது வட்டி கட்டணம் அல்லது வேறு ஏதாவது தொகை முழுமையாக அல்லது பகுதியளவு நிலுவை |
|---|---|
| எஸ்எம்ஏ-0 | 30 நாட்கள் வரை |
| எஸ்எம்ஏ-1 | 30 நாட்களுக்கு மேல், 60 நாட்கள் வரை |
| எஸ்எம்ஏ-2 | 60 நாட்களுக்கு மேல், 90 நாட்கள் வரை |
| என்பிஏ | 90 நாட்களுக்கும் மேல் |

எஸ்எம்ஏ அல்லது என்பிஏ என வகைப்படுத்தல் தொடர்புடைய தேதிக்கான நாள்-இறுதி செயல்முறையின் ஒரு பகுதியாகச் செய்யப்படும், மேலும் எஸ்எம்ஏ அல்லது என்பிஏ வகைப்படுத்தல் தேதி என்பது நிறுவனத்தால் நாள் இறுதி செயல்முறை மேற்கொள்ளப்படும் நாள்காட்டி நாளின் தேதியாக இருக்கும்.

ஒரு முறை என்பிஏ என வகைப்படுத்தப்பட்ட கடன் கணக்குகள், அசல், வட்டி மற்றும்/அல்லது பிற தொகைகளின் நிலுவைத் தொகைகளை கடன் பெறுபவர் முழுமையாகச் செலுத்தி முடித்தால் மட்டுமே வழக்கமான சொத்து என்று மேம்படுத்தப்படும் ("வழக்கமான சொத்து" என்ற பதம் எஸ்எம்ஏ அல்லது என்பிஏ என்று வகைப்படுத்தத் தேவைப்படாத ஒரு கடன் கணக்கு என்று பொருள்படும் மற்றும் அதைக் குறிக்கும்). எஸ்எம்ஏ அல்லது என்பிஏ (வகைப்படுத்தல் என்பது கடன் பெறுபவரின் நிலையில் செய்யப்படும், அதன் பொருள் கடன் பெறுபவரின் கடன் கணக்குகள் அனைத்தும், அதிகபட்ச தவணை தவறிய நாட்களைக் கொண்ட கடன்களுக்குப் பொருத்தமானதாக வகைப்படுத்தப்படும்.

எஸ்எம்ஏ அல்லது என்பிஏ அல்லது ஆர்பிஐ பரிந்துரைத்தவாறு வேறு ஏதாவது புதிய பிரிவாக வகைப்படுத்தலில் ஏதாவது மாற்றம் இருப்பின் அது நிறுவனத்தால் தானாகவே செயல்படுத்தப்படுவதுடன், அதுவே கடன் பெறுபவருக்கும் பொருந்தும்.

எஸ்எம்ஏ / என்பிஏ வகைப்படுத்தலுக்கு உதாரணம்: கடன் கணக்கு ஒன்றின் தவணைத் தேதி மார்ச் 31, 2022 என்றிருந்து, அந்தத் தேதிக்கான நாள் இறுதி செயல்முறையை நிறுவனம் மேற்கொள்ளப்படும் வரை முழு நிலுவையும் வரப் பெறவில்லை என்றால், நிலுவைத் தொகையின் தேதி மார்ச் 31, 2022 ஆகும். கடன் கணக்கு தொடர்ந்து நிலுவையில் இருந்து ஏப்ரல் 30, 2022 அன்று நாள்-இறுதி செயல்முறையை மேற்கொள்ளும்போது அந்தக் கடன் கணக்கு எஸ்எம்ஏ-1 என்று குறிக்கப்படும், அதாவது நிலுவையில் இருந்து தொடர்ந்து 30 நாட்கள் நிறைவு. அதன்படி, அந்தக் கடன் கணக்குக்கு எஸ்எம்ஏ-1 வகைப்படுத்தலுக்கான தேதி ஏப்ரல் 30, 2022 ஆகும்.

அதுபோல, அந்தக் கடன் கணக்கு தொடர்ந்து நிலுவையில் இருந்து மே 30, 2022 அன்று நாள்-இறுதி செயல்முறையை மேற்கொள்ளும் போது அந்தக் கடன் கணக்கு எஸ்எம்ஏ-2 என்று குறிக்கப்படும், மேலும் அது நிலுவையில் இருப்பது தொடர்ந்து ஜூன் 29, 2022 அன்று நாள்-இறுதி செயல்முறையை மேற்கொள்ளும் போது அந்தக் கடன் கணக்கு என்பிஏ என்று குறிக்கப்படும்

எஸ்எம்ஏ & என்பிஏ என்று வகைப்படுத்தலுக்கான அடிப்படை மற்றும் உதாரணம் ஆகியவை, ஒரு கடன் கணக்கை எஸ்எம்ஏ & என்பிஏ என்று வகைப்படுத்தலுக்காகப் பின்பற்றப்படும் செயல்முறையை கடன் பெறுபவர் புரிந்து கொள்வதற்காகத் தரப்பட்டுள்ளது. இந்திய ரிசர்வ் வங்கியின் அறிவுறுத்தல்கள்/வழிகாட்டல்களின் பேரில், மேலே குறிப்பிடப்பட்ட செயல்முறை மாறுதலுக்கு உட்பட்டது.

கீழே பெயரிடப்பட்டவரால்

கையெழுத்திட்டு வழங்கப்பட்டது

சோழமண்டலம் இன்வெஸ்ட்மெண்ட் அண்டு ஃபைனான்ஸ் கம்பெனி

கீழே பெயரிடப்பட்டவரால் கையெழுத்திட்டு வழங்கப்பட்டது

அங்கீகரிக்கப்பட்ட கையெழுத்திடுபவர்

கீழே பெயரிடப்பட்டவரால்

கையெழுத்திட்டு வழங்கப்பட்டது

கடன் பெறுபவர் பெயர் & கையெழுத்து

கீழே பெயரிடப்பட்டவரால்

கையெழுத்திட்டு வழங்கப்பட்டது

இணை-கடன் பெறுபவர் 1 பெயர் & கையெழுத்து

கீழே பெயரிடப்பட்டவரால்

கையெழுத்திட்டு வழங்கப்பட்டது

இணை-கடன் பெறுபவர் 2 பெயர் & கையெழுத்து

கீழே பெயரிடப்பட்டவரால்

கையெழுத்திட்டு வழங்கப்பட்டது

இணை-கடன் பெறுபவர் 3 பெயர் & கையெழுத்து

கீழே பெயரிடப்பட்டவரால்

கையெழுத்திட்டு வழங்கப்பட்டது

இணை-கடன் பெறுபவர் 4 பெயர் & கையெழுத்து

கீழே பெயரிடப்பட்டவரால்
கையெழுத்திட்டு வழங்கப்பட்டது

இணை-கடன் பெறுபவர் 5 பெயர் & கையெழுத்து

பிணையாளர்(கள்) பெயர் & கையெழுத்து

## திருப்பிச் செலுத்தல் அட்டவணை

| தவணை# | தவணைத் தேதி | ஆரம்ப இருப்பு | தவணை | அசல் | வட்டி | செயல்படும் விகிதம் (%) நாட்கள் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

* இங்கு மேலே வழங்கப்பட்டுள்ள திருப்பிச் செலுத்தல் அட்டவணை உத்தேசமானதே, அது உண்மையான தேதி மற்றும் வழங்கப்பட்ட கடன் அளவைப் பொறுத்து மாறக்கூடும் என்பதுடன், திருத்தப்பட்ட திருப்பிச் செலுத்தல் அட்டவணை கடன் பெறுபவருக்கு எழுத்துபூர்வமாகத் தெரிவிக்கப்படுவதுடன், அது இந்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாகக் கருதப்படும் என்பதைத் தயவு செய்து கவனத்தில் கொள்ளவும்.